
# உரைவேந்தருக்கு ஒரு நூற்றாண்டு



சித்தாந்த கலாநிதி உரைவேந்தர்
ஔவை துரைசாமி நூற்றாண்டு
(1903 - 2003)

# உரைவேந்தருக்கு ஒரு நூற்றாண்டு

25-9-2003

*சித்தாந்த கலாநிதி உரைவேந்தர்*

*ஔவை துரைசாமி நூற்றாண்டு விழா*

*1903 - 2003*

தொகுப்பாளர்

இலக்கிய மாமணி

பி.வி. கிரி

*மகிழ்ந்து வழங்குவது*

**மணிவாசகர் பதிப்பகம்**

விலை : ரூ. 5.00

# உரைவேந்தர் பற்றிப் பாவேந்தர்!

அவ்வை துரைசாமிப் பிள்ளை அருந்தமிழின்
செவ்வை உரைசாமிப் பிள்ளையன்றோ - இவ்வையம்
எக்களிக்கத் தந்தான்இருந்தமிழ் நூலுரைகள்
சிக்கலின்றித் தந்தான் தெளிந்து.

புறத்தின் உரைகள் புலமைத் திறமை
வரலாறு பேசும் மகிழ - உறவாடும்
பாட்டின் குறிப்பெல்லாம் பண்பாட்டுச் சங்கத்தேன்
கூட்டில் விளையும் கொடை.

நூலுக்கு நூலருமை காட்டுவதில் நுண்ணறிஞன்
மேலுக்குச் சொல்லவில்லை வேர்ப்பலாத் - தோலுக்குள்
உள்ள சுளைகொடுக்கும் உண்மை உழைப்பாளன்
அள்ளக் குறையாத ஆறு.

இரவுபகல் தானறியான் இன்தமிழை வைத்து
வரவு செலவறியான் வாழ்வில் - உரமுடையான்
தன்கடன் தாய் நாட்டு மக்கட் குழைப்பதிலே
முன்கடன் என்றுரைக்கும் ஏறு

பள்ளிமுதல் பல்கலைச் சாலைவரை பாங்கெண்ணிக்
கொள்முதல் செய்யும் கொடைமழை - வெள்ளத்தேன்
பாயாத ஊருண்டா? உண்டா உரைவேந்தை
வாயார வாழ்த்தாத வாய்!

# பதிப்புரை

நேற்று வாழ்ந்தவரைக் கூட நினைவில் கொள்ள முடியாத நிலையில் இன்றைய நூற்றாண்டுக் காணும் ஔவை துரைசாமியின் நினைவு நிரல்களை ஆர்வத்தோடு தொகுக்க முற்பட்டோம். நூல் நலமும் நுணுக்கப் புலமையும் இணைந்த நூற்றுக்கணக்கான கட்டுரைகளைத் தொகுத்துள்ளோம்.

பழந்தமிழ் நூல்களையும் பயனுள்ள கட்டுரைகளையும் பயில்வார் அருகிவரும் நிலையில் இவற்றை வெளியிடக் கருதுகிறோம்.

மணிவாசகர் பதிப்பக உரிமையாளரும் செந்தமிழ்ப் பெரும் பேராசிரியராகவும் திகழும் பதிப்புச் செம்மல் டாக்டர் ச. மெய்யப்பன் அவர்கள் எங்களுக்கு உறுதுணையாக வழிகாட்டி நின்றார். அளவிலும் பொலிவிலும் இந்நூலைப் பெரிதாக்க முயன்றுள்ளோம். தமிழுலகம் இந்நூல் வரவை ஏற்றுப் போற்ற வேண்டுகிறோம்.

அண்ணாநகர்,
சென்னை - 102.

– ஔவை துரைசாமி
நூற்றாண்டு விழாக் குழு

# ஔவை துரைசாமிப்பிள்ளை நினைவலைகள்

தாமரைச் செல்வர் திரு. வ. சுப்பையா பிள்ளை
(சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சித் தலைவர்)

1949ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழராய்ச்சித்துறை விரிவுரையாளர் சித்தாந்த கலாநிதி ஔவை துரைசாமிப் பிள்ளையவர்கள் எழுதிய "தெய்வப்புலவர் திருவள்ளுவர்" என்ற ஆராய்ச்சி நூல் கழக வழி வெளியிடப் பெற்றது.

திருக்குறள் முப்பாலுக்கும் உரைவேந்தரவர்கள் மிகு விரிவான உரை எழுதவேண்டுமென்ற அவா எனக்கு உண்டு. நாகை. சொ. தண்டபாணிபிள்ளையவர்கள் அறத்துப்பாலுக்கு மட்டும் விரிவுரை எழுதினார்கள். அதனைப் போற்றாதார் இல்லை. பொருள், இன்பங்கட்கு உரை எழுதாத நிலையில் கூற்றுவன் அவர்கள் ஆருயிரைக் கவர்ந்தனன். 'திருக்குறள் அறம்-நாகை. தண்டபாணி விருத்தியுரை' எனப் பாராட்டப் பெறுகின்றது. அதையொத்த விரிவுரை மற்ற இரண்டு பால்கட்கும் எழுதப் பெறுதல் வேண்டுமென்று திருக்குறள் அன்பர்கள் விரும்புகிறபடி எழுதக்கூடிய தகுதியுடையவர், பழந்தமிழ் இலக்கண, இலக்கியங்கள், சைவசமய இலக்கியங்கள் பலவற்றையும் ஐயமறத் தெளிவுறக் கற்ற நம் ஔவையவர்களே ஆவார்.

1939ஆம் ஆண்டில் பெரும் பேராசிரியர் ஔவை துரைசாமிப் பிள்ளையவர்கள் வடார்க்காடு மாவட்டம் போளூரில், மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராக இருந்தார். அம்மாவட்டக் கல்வியதிகாரியாக விருந்த உயர்திரு. ச.சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் ஒரு முறை கழகத்திற்கு வந்திருந்தபோது 'சித்தாந்தச் செந்நெறிப் புலமையும் செந்தமிழ் இலக்கண இலக்கியப் புலமையும் மிக்க தமிழாசிரியர் ஒருவர் போளூரில் இருக்கிறார். அவர் நாவலர் வேங்கடாசாமி நாட்டாரவர்களிடமும், கரந்தைக் கவியரசு வேங்கடாசலம்

பிள்ளையவர்களிடமும் பழந்தமிழ் இலக்கண இலக்கியங்களை முறையாகப் பாடங்கேட்டுச் சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் பட்டம் பெற்றவர். அவர் சிறந்த பேச்சாளர்; எழுத்தாளர்.

ஒரு நாள் காலையிற் புறப்பட்டு போளூரை அடைந்து ஔவை துரைசாமிப் பிள்ளையவர்கள் இல்லத்துக்குச் சென்றேன். புலவரவர்கள் வெளியூர்க்குச் சென்றிருந்தமையால் கடிதம் எழுதி வீட்டம்மையாரிடங் கொடுத்துவிட்டு சென்னைக்குத் திரும்பினேன்.

எனது கடிதத்தைப் பார்த்தபின் என்னோடு பேசுவதற்குப் புலவரவர்கள் சென்னைக்கு வந்தனர். அப்போது ஐம்பெருங் காப்பியம், ஐஞ்சிறு காப்பியங்களுள் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, சூளாமணி, பெருங்கதை ஆகிய ஐந்து நூல்கட்கும் சுருக்கப் பதிப்புகளைக் கழகவழி வெளியிட வேண்டுமென்று விரும்பினேன். புலவரவர்களும் எனது விருப்பத்தை மகிழ்வோடு ஏற்று, முதற்கண் 'சீவக சிந்தாமணிச் சுருக்கம்' எழுதியனுப்புவதாகக் கூறினர்.

அங்ஙனமே அவர்கள் எழுதியனுப்பிய சீவகசிந்தாமணிச் சுருக்கப் பதிப்பில் முழுநூலில் ஏறக்குறைய காற்பங்குச் செய்யுள்கள் இடம் பெற்றுள்ளன. கதைப் போக்குக் கெடாமல் இனிய செய்யுள்களைத் திரட்டிக் கோத்து, இடையிடையே விடுக்கப்பட்ட செய்யுள்களின் தொடர்பைச் சுருக்கமாக ஆங்காங்கே எளிய உரை நடையில் எழுதிச் சேர்த்து, ஒவ்வொரு பக்கத்திலும் அடியில் தெளிவான உரைக்குறிப்புகளும் வரைந்து விளக்கமான ஓர் ஆராய்ச்சி முன்னுரையோடு இந்நூல் பதிக்கப் பெற்றுள்ளது. செய்யுள்கள் சீர்பிரித்தும் கடின சந்தி பிரித்தும் உரிய தலைப்புகளுடன் அமைக்கப் பெற்றுள்ளன. நச்சினார்க்கினியருரையோடு சீவக சிந்தாமணியைப் பயில் வார்க்கு இச்சுருக்க நூலும் உரையும் நன்கு பயன்படுவன வாயிற்று. இது 1941 திசம்பரில், 376 பக்கங் கொண்டதாய் வெளியிடப் பெற்றது.

சங்க இலக்கியங்கள் பலவற்றை ஏட்டுச் சுவடிகளினின்றும் பெயர்த்து வெளியிட்டுப் பெரும்புகழெய்திய முதுபெரும் புலவர் டாக்டர் சாமிநாதையர் அவர்கள் முதன் முதல் வெளியிட்ட நூல் 'சீவக சிந்தாமணி' 'நச்சினார்க்கினியர் உரை'யேயாகும்.

அதே போல் கழகம் முதன் முதல் வெளியிடுமாறு திருவருள் கூட்டியதும் 'சீவக சிந்தாமணிச் சுருக்க நூலே'யாகும். அவரை உங்கள் கழக நூற்றாண்டுக்கு நன்கு பயன்படுத்தலாமே என்று கூறினார். அதனைக் கேட்டு யான் பெரு

மகிழ்வெய்தினேன். ஆனால், இச் சுருக்க நூலாசிரியர் எட்டுத் தொகையில் அகப் பொருள் நூலாகிய ஐங்குறுநூற்றின் மருதக்கலிப் பாட்டு நூறுக்கு உரை எழுதினர் என்பதும் அது அவர்தம் மதிப்பு மிக்க மாணவர் புலவர் கோவிந்தனவர்களால் 1938இல் சேயாற்றில் அச்சிட்டு வெளியிடப் பெற்றதென்பதும் அறிதற்பாலன. புலவர் ஔவையவர்கள் தொடர்பு கழகத்துக்கு ஏற்பட்டபின் புலவர் கோவிந்தனவர்களிடம் விற்கப்பெறாமல் தங்கிக்கிடந்த மருதக்கலி உரைப்படிகள் யாவும் கழகவழி விற்றுக்கொடுக்கப் பெற்றன.

சீவக சிந்தாமணிச் சுருக்கம் வெளிவந்தபின் அதைப் போலவே புலவர் ஔவையவர்கள் எழுதிய ‘சிலப்பதிகாரச் சுருக்கம்’ 1943இலும், மணிமேகலை சுருக்கமும், சூளாமணிச் சுருக்கமும் 1943இலும் வெளியிடப் பெற்றன.

புலவர் ஔவையவர்கள் 1941இல் செங்கம் உயர்நிலைப் பள்ளியிலும், 1942இல் திருப்பதிக் கீழ்த்திசை ஆராய்ச்சிக் கழகத்திலும் தமிழாசிரியராகப் பணிபுரிந்து, 1943சூன் முதல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே தமிழ் ஆராய்ச்சித் துறையில் விரிவுரையாளராக அமர்த்தப் பெற்றனர். அங்கே எட்டு ஆண்டு காலம் பணி புரிந்து 1951 சூலைத் திங்களில் மதுரைத் தியாகராாசர் கலைக்கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக அமர்த்தப் பெற்றனர்.

திருப்பதியில் வேலை பார்க்கும் போது கழக அமைச்சரும் என் அருமைத் தமையனாருமாகிய திருவரங்கனார் அனுப்பிய ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்றாகிய யசோதர காவியம் ஏட்டுச் சுவடியுடன் தமக்குக் கிடைக்கப் பெற்ற வேறு இரண்டு சுவடிகளையும் வைத்து ஆராய்ந்து அந்நூலுக்குத் தெளிவான உரை எழுதி அனுப்பி வைத்தனர். அதனைக் கழகம் அச்சிட்டு 1944சூன் திங்களில் வெளியிட்டது.

சிலப்பதிகாரம், மணிமேகலை, அகநானூறு ஆகிய மூன்று நூல்கட்கும் புத்துரை எழுதித் தருமாறு முதுபெரும் புலவர் நாவலர் வேங்கடசாமி நாட்டாரவர்களை வேண்டினோம். அவர்களும் அதற்கிசைந்து முதற்கண் சிலப்பதிகாரத்துக்கு விளக்கவுரை எழுதித் தந்தனர். அதன்பின் மணிமேகலை முதல் 26 காதைகட்குத் தம் அருமைத் திருமகளார் சிவ.பார்வதியம்மையாரைக் கொண்டு பதவுரையும் தம் விளக்கவுரையும் எழுதி ஏனைய நான்கு காதைகட்கும் சமய நூல்களை ஆய்ந்து எழுதவேண்டுமென்று கருதுகையில் திடுமெனக் கூற்றுவன் நாட்டாரவர்களது இன்னுயிரைக் கவர்ந்து சென்று இறைவன் திருவடி நீழலிற் சேர்ப்பித்தனன். எனவே, தமக்குக் கல்வி கற்பித்த

தம் ஆசிரியர் கரந்தைக் கவியரசு அவர்கள் விரும்பியபடி புலவர் ஔவை துரைசாமிப் பிள்ளையவர்கள் புத்த சமயக் கோட்பாடு களையும் தருக்க நூல்களையும் ஆழக் கற்றுத் தெளிந்து இறுதிக் காதைகள் நான்கிற்கும் விளக்கவுரை எழுதித் தம் ஆசிரியர்க்குப் புகழ் ஈட்டிக் கொடுத்தனர்.

1944 சூலைத் திங்கள் 11ஆம் நாள் புலவர் ஔவை அவர்கள் எழுதிய கடிதத்தில்,

"அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றிய பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை எம்.ஏ., எம்.எல். அவர்கள் நோயுற்று உடல் நலிவால் பணியினின்று 1-7-1944இல் விலக வேண்டியதாயிற்று. அவர் கட்குச் சிறிது நேரம் பேசவோ எழுதவோ நடக்கவோ முடியாது. கைநடுக்கம் மிகுதியாய் விட்டது. அவரைக் காணுந்தோறும் கவலை பெரிதாகிறது. அவர்கள் தாம் இப்போதிருக்கும் நிலையில், எங்கே போவது? எவ்வாறு வாழ்வது? என்ற கவலையில் செய்தவறியாது திகைத்த வண்ணம் இருக்கின்றார். சிதம்பரத்தை விட்டுப் போவதற்கே உடல் இடந்தருமோ என்ற கவலையும் அச்சமும் அடைகின்றார்" என்றும், இன்னும் இவை போன்ற மனவருத்தந் தரத்தக்க தொடர்களையும் குறிப்பிட்டு, "இவற்றிற்குத் தங்கள் அன்பான பதில் எதிர்பார்க்கிறேன்." என்று முடித்திருந்தார். அக்கடிதம் எனது நெஞ்சத்தை நீராய் உருக்குவதாயிற்று.

பேராசிரியர் எம்.எல். பிள்ளையவர்கள் உடல் நலிவுற்று ஆதரவற்ற நிலையில் இருப்பது தெரிந்தவுடன் அப்போது கழகத் தலைவராகவும், பெரியார் ஈ.வெ.ரா., அவர்கள் மதிப்புக் குரியராகவுமிருந்த உயர்திரு ப. சிதம்பரம் பிள்ளை (பி.ஏ. பி.எல்.) அவர்களிடம் சொல்லவே, அவர்கள் 'நீர் பிள்ளையவர்கட்கு என்னென்ன உதவிகள் செய்ய வேண்டுமென்று கருதுகிறீரோ அத்தனைக்கும் யான் ஒப்பம் போடுகிறேன்' என்று ஊக்கவுரை அளித்தனர். உடனே, புலவர் ஔவை அவர்கட்குத் திரு எம்.எல்.பிள்ளை அவர்களைப் புகை வண்டியில் முதல் வகுப்பில் ஏற்றித் துணையோடு நெல்லைக்கு அனுப்பி வைக்குமாறு கடிதம் எழுதியதோடு தந்தியுங் கொடுத்தேன். அதன்படி திரு. பிள்ளையவர்கள் துணையோடு நெல்லைக்கு அவர் அனுப்பி வைக்கப்பெற்றனர்.

புலவரவர்கள் திரு. பிள்ளையவர்களுக்கு இவ்வகையில் காலத்தினாற் செய்த உதவி என்றும் மறக்கற்பாலதன்று.

இனி, புலவர் ஔவையவர்கள் கழக விழாக்களில் கலந்தும் செந்தமிழ்ச் செல்வி இதழாசிரியர் குழுவில் ஓர் உறுப்பினராக

இருந்தும் ஆற்றிய பணிகளைப் பற்றி ஈண்டு எடுத்துக் கூறுவது வேண்டற்பாலதே.

சென்னையில் 22-4-44இல் சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற புறநானூறு மாநாட்டில் புறநானூறு காட்டும் தமிழ்நாகரிகம்' என்னுந் தலைப்பில் கட்டுரை எழுதி வழங்கிப் பேசியதும், நெல்லையில் 9-2-1952இல் டாக்டர் மு. வரதராசனார் தலைமையில் நடந்த பத்துப்பாட்டு மாநாட்டில் 'திருமுருகாற்றுப்படை' பற்றிக் கட்டுரை எழுதித் தந்து பேசியதும், நெல்லையிலே 12-2-1956இல் நடைபெற்ற பதினெண் கீழ்க்கணக்கு மாநாட்டிற்குத் தலைமையுரை எழுதி வழங்கித் தலைமை தாங்கிச் சிறப்பித்ததும் போற்றி மகிழ்தற்குரியன.

சென்னையில் 1961 ஆகத்துத் திங்களில் வெளியிட்ட கழகத்தின் 1008ஆவது வெளியீட்டு விழா மலருக்கு எழுதிய 'திருவாமாத்தூர் யானை' என்ற ஆராய்ச்சிக் கட்டுரையும் 1968இல் அக்டோபர்த் திங்களில் வெளியிட்ட திருவள்ளுவர் விழா மலருக்கு எழுதிய 'வள்ளுவர் காட்டும் சமயக் கருத்துகள்' என்ற கட்டுரையும், 'எத்தனை நூல் கற்றாலும், 'எப்பொருளை ஆய்ந்தாலும்' என்ற வெண்பாவும் 1970 திசம்பரில் வெளியிட்ட கழகப் பொன்விழா மலருக்கு எழுதிய 'கழகத் தமிழ்ப் பயிர்' என்ற கவிதையும் என்றும் நின்று நிலவுதற்குரியன.

நெல்லை தருமபுர மடத்தில் 1952 மே திங்களில் 21 நாள்கள், தொடர்ந்து சிவஞானபோத பாட வகுப்பு நடைபெற்றது. பாடம் நடத்தியவர் சாத்தூர் வழக்கறிஞரும் தமிழ்ப் புலவருமாகிய தூ. சு. கந்தசாமி முதலியார் எம்.ஏ. அவர்களாவர். வகுப்பில் ஆசிரியர்களும் மாணவர்களுமாக நாற்பதின்மர் பாடங் கேட்டனர். காலையிற் பாடஞ் சொல்லுதலும், மாலையில் கேள்விகட்கு விடை சொல்லுதலும் இரவு சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுதலுமாக நிகழ்ச்சி அமைக்கப் பெற்றிருந்தது. அறிஞர் ஔவையவர்கள் சிறப்புச் சொற்பொழிவுக்காக அழைக்கப் பெற்றிருந்தனர்.

சென்னையில் 25-12-1964இல் உரைவேந்தர் ஔவை அவர்கள் தலைமையில் காப்பிய நிறைவு விழா மிகவுஞ் சிறப்பாக நடைபெற்றது. அவ்விழாவிலே பெருமழைப் புலவர் எழுதிய 'நீலகேசி உரை' வெளியிடப் பெற்றது. தலைவரவர்களின் மதிப்புமிக்க மாணவி தமிழ்த் திருவாட்டி இராதா தியாகராசன் அம்மையார் 'சிலப்பதிகாரம்' பற்றி ஆற்றிய சொற் பொழிவினைக் கேட்டவர்கள் விழித்த கண் விழித்தபடியும் மடுத்தசெவி மடுத்தபடியும் தம்மை மறந்து சுவைத்தனர் என்றால்

அது மிகையாகாது. ஆசிரியர் தலைமையில் அவர்தம் அருமை மாணவியார் இனிய பேச்சைக் கேட்க வேண்டுமென்று நீண்ட நாள்களாக எண்ணிய எனது எண்ணம் அன்று நிறைவெய்தி எனக்கு எல்லையில்லா இன்பம் நல்கியது, இங்கே தமிழறியாத திருவாட்டியார் தம் ஆசிரியரிடம் தமிழ் பயின்ற முறையினை எடுத்து விளக்குவது இனிமை தருவதாகும். முதற்கண் தமிழ் எழுத்துக்களைக் கற்றுக்கொள்ளச் செய்து பின் திருக்குறள் பரிமேலழகருரை நூலைக் கையிலே கொடுத்துப் படித்துப் பொருளுணருமாறும் அதன் வழியே பிற இலக்கியங்களைக் கற்குமாறும் தம் ஆசிரியர் செய்ததைக் கலைமகளும் திருமகளும் ஒருருக் கொண்டாற் போல் விளங்கும் அம்மையாரவர்கள் இயம்பக்கேட்டு வியந்தேன்.

கழகப் பொன்விழாவின் மொழி மாநாட்டிலே அந்நாள் சட்டப்பேரவைத் தலைவர் மாண்புமிகு கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில், நம் புலவரவர்கள் மனோன்மணீய நாடகப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துப் பாராட்டுரை வழங்கினர். இங்கே தம் மாணவர் தலைமையில் ஆசிரியர் பேசியது குறிப்பிடத் தக்கது. அன்று காலை விழாத் தொடக்கத்தில் மாண்புமிகு கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் புகழ்மிகு சீரிய துறைகளில் நூல்களெழுதிய கழக நூலாசிரியர் எழுவருள் ஒருவராக உரைவேந்தர் ஔவை துரைசாமி அவர்கள் பரிசும் பாராட்டும் பெற்றனர்.

1971 பிப்பிரவரித் திங்களில் மதுரைத் திருவள்ளுவர் கழகத்தில் இராமநாதபுர மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கி. இலட்சுமிகாந்தன் பாரதி இ.ஆ.ப. தலைமையில் நடைபெற்ற கழகப் பொன் விழாவிலே உரைவேந்தர் ஔவையவர்கள் பேராசிரியர் கா.சு. பிள்ளையவர்கள் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேசினர்.

தாம் பாடங் கேட்ட - பழகிய பெரும்புலவர்களைப் பற்றிச் செந்தமிழ்ச் செல்விக்கு எழுதி வருமாறும் திங்கடோறும் அதன் பொருட்டு ரூ.25/- அனுப்புவதாகவும் புலவர் ஔவை அவர்களை நேரிற் கண்டு சொல்லி வேண்டினேன். அதற்கு அவர்கள் 7-12-47இல் எழுதிய கடிதம் வருமாறு:

“யான் நேரில் தெரிவித்துக் கொண்டபடி இந்தத் திசம்பர் முதல் திங்கடோறும் ரூ.25/- அனுப்பியுதவ வேண்டுகிறேன். தமிழ்ப் பெருமக்கள் வரலாற்றினைத் தொடங்கி விட்டேன். கனக சபைப் பிள்ளையவர்கள் வரலாறு கிடைத்திலது. உமாமகேசுரம்

2-2.

பிள்ளை, நாட்டார் இருவர் வரலாறு முடியும் நிலையிலுள்ளது. கா.சு. பிள்ளை வரலாறு தொடங்குகிறேன்."

புலவர் ஒளவையவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே பணியேற்பதற்கு முன் 21-6-1943இல் ஆரணியிலிருந்து எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டது அவர்கள் நன்றியுணர்வினைக் காட்டுகின்றது.

"அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து உத்தரவு இன்று வந்தது. இதற்குத் தோன்றாத் துணையாய் உள்ளிருந்து ஆவன புரிந்த அருளண்ணல் நம் அருமைப் பண்டித மணியவர்களே என்று நண்பர்களால் அறிய, அதற்கு உள்ளூறு துணை செய்த தங்கள் நன்றியினை யான் சிறிதும் மறத்தற் கில்லேன்."

உரைவேந்தர் ஒளவையவர்கள் மணிவிழா 1962, 63இல் மதுரையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. யான் அதில் கலந்து கொள்ள வாய்ப்பில்லாது போயிற்று. எனவே, நெல்லையில் 1964 ஏப்பிரல் 12ஆம் நள் ஆறாவது சிற்றிலக்கிய மாநாட்டையொட்டி உரைவேந்தர் அவர்கள் மணிவிழாவைச் சிறப்பாக நடத்தத் திட்டம் வகுத்து அழைப்பிதழ் அனுப்பப் பெற்றது. முதல் நாளே நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு சந்திரசேகரன் அவர்களைக் கண்டு புலவரவர்கட்குப் பொன்னாடைபோர்த்தி வாழ்த்துமாறும், மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரி திருவாளர் கே.ஆர். மாணிக்கம் அவர்களைக் கண்டு பொற்கிழி வழங்குமாறும் வேண்டிப் புலவரவர்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளைக் கொடுத்து வந்தேன்.

"நெல்லையிலிருந்து நேற்று நண்பகல் இங்க வந்து சேர்ந்தேன். மணிவிழாச் சிறப்பு இனிது நடைபெற்றது. நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்திரசேகரன் அவர்கள் கழகத்தின் சார்பில் பொன்னாடை போர்த்திப் பாராட்டினர்; கல்வித் துறை ஆய்வாளர் (Divisional Inspector) திரு.கே.ஆர். மாணிக்கம் அவர்கள் தங்கள் உள்ளன்பின் உருவாய் பொற்கிழி வழங்கிப் புகழ் புரிந்தார். சைவத்திரு மாணிக்கவாசகம் பிள்ளை அவர்கள் பாராட்டு மலரைப் படித்தளித்தார். பேராசிரியர் அருளப்பன், புலவர் நவநீதகிருட்டிணன் முதலியோர் பாராட்டியுரைத்தனர். எல்லாம் மிக்க சிறப்புடன் நடைபெற்றன. எனினும், நீங்கள் இல்லாமை எனக்குப் பெருங்குறையாக இருந்தது. எதிர்பாராத வகையில் நிகழ்ந்த இன்னாமை காரணமாக நீங்கள் இல்லாமை நேர்ந்தது எனது தவக்குறை.

"கால வேற்றுமையால் கருத்து வேற்றுமை தோன்றுவது இயல்பு; எனினும், உள்ளத்தில் தோய்ந்து ஊடுருவி நிற்கும்

உண்மையன்பு ஒருவாற்றானும் மாறாது என்னும் உயரிய உண்மை உங்கள் பால் ஒளிவிட்டுத் திகழ்வது காண என்மனம் நீராய் உருகி விட்டது. செந்தமிழ்ப் பெருந்தொண்டும் சீர்த்த மனப்பண்பும் உருக்கொண்டாற் போல் விளங்கும் உங்களது தூய அன்பு நினைக்குந்தோறும் எனக்குப் பெரியதோர் இறும்பூது நல்குகின்றது. அதனால் என் உள்ளத்திற் பிறந்த நன்றியுணர்வு என்னுயிரோடே கிடந்து பின்னிப் பிணைந்து நிற்கிறது.

“அன்று உங்கள் அருமையண்ணலின் அன்பிற் பிணிப்புற்ற என் தமிழறிவு உங்களது உயரிய தூய நட்பால் சிறந்து நீங்கள் அன்பு கனிந்து பாராட்டுமளவை அடைந்தமைக்குக் காரணம் நீங்களே என்பதையும் நான் மறவேன்; மறந்தால் கெடுவேன் என்பதையும் நான் நன்கறிவேன். செந்தமிழ்த்தாயின் திருவருளால் உங்கள் பணி சிறந்து மேன்மேலும் உயர்வதாக, தமிழறிஞர்கட்கு வாழ்வளிக்கும் உங்கள் உள்ளம் பனிபடு இமய மால்வரையினும் பெரிது; நிலத்தினும் பெரிது; நீரினும் ஆரளவின்று. அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த ஆலவாயண்ணல் திருவருளால், அவன்து அருள்போல் பெருகிய வையை மணலினும் பல்லாண்டு வாழ்க.” என்ற கடிதம் நினைவில் நிற்கிறது.

புலவர் ஔவையவர்கள் எழுதிய ‘சைவ சமய இலக்கிய வரலாறு’ வரலாற்று நூல் வரிசையில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தாரால் வெளியிடப் பெற்றுள்ளது. பழைய உரையோடு கூடிய ‘ஞானாமிர்தம்’ என்னும் சைவ சமய நூலைப் பல ஏட்டுச் சுவடிகளைக் கொண்டு ஆராய்ந்து விளக்கக் குறிப்பு எழுதியுள்ளார். அதுவும் அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடாகப் பதிக்கப் பெற்றுள்ளது.

புலவரவர்கள் ஏட்டுச் சுவடிகளைப் படிப்பதிலும், கல்வெட்டுகளை ஆராய்வதிலும் பயிற்சி நிரம்பியவர்கள். எதனையும் விரைந்து கற்றுத் தெளிவு பெறும் ஆற்றலும், கற்றுத் தெளிவு பெற்றதை விரைந்து எழுதும் வல்லமையும் கைவரப் பெற்றவர். அவர் கையெழுத்து ஒரே போக்காக அச்சுக் கோப்பவர்க்கு மயக்கம் ஏற்படா வகையில் அமைந்திருக்கும். சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம் முதலிய மெய்கண்ட சாத்திர நூல்களைத் திருமடங்களிலும் சைவப் பேரவைகளிலும் முறையாகப் பாடஞ் சொல்லி விளக்கும் மாட்சியுடையவர்.

பல மன்றங்கள், பள்ளி, கல்லூரிகள், திருக்கோயில் விழாக்கள் முதலியவற்றில் பல பொருள்களைப் பற்றிச் சொற்பொழிவுகள் ஆற்றினர். செந்தமிழ்ச் செல்வி, செந்தமிழ், தமிழ்ப் பொழில், தமிழ்ப் பாவை போன்ற இதழ்கட்கும்,பலவகை மலர்கட்கும் கட்டுரைகள் வரைந்துள்ளனர். சிலர் நூல்களை எழுதும் திறன்மிக்கவராயினும், மேடைகளில் பேசும் திறமையற்றவர்களாகக் காணப் பெறுகின்றனர். ஆனால், நம் ஒளவைப் புலவரவர்களோ நூலெழுதும் ஆற்றலோடு கேட்டார்ப் பிணிக்குந் தகையவராய்ப் பேசுந்திறலாளர் ஆவர்.

மாண்பமைந்த இப்புலவர் பெருமானுக்கு அறிவறிந்த ஆண் மக்கள் ஐவரும் பெண்மக்கள் நால்வரும் உளர். மூத்த திருமகனார் ஒளவை நடராசனார். 'தந்தையை ஒப்பர் மக்கள்' என்னும் முதுமொழிக்கு இலக்கியமாக விளங்குகிறார். எம்.ஏ., எம்.லிட். பி.எச்.டி., பட்டங்கள் பெற்று உயர்திரு வள்ளல் நா.மகாலிங்கம் அவர்களின் இராமலிங்கர் பணிமன்றில் தொண்டு புரிந்து வருகின்றார். பட்டி மன்றங்கள் இவரால் கிளர்ச்சியும் பெருமையும் அடைகின்றன. எனவே, இவர், 'பட்டிமன்ற மன்னர்' என அழைக்கப் பெறுகின்றனர். அவர் தம் தந்தையாரைப் போலவே 'ஒளவை நடராசன்' என்றே கையெழுத்திடுகின்றனர். ஞானச்சம்பந்தனும், இளயோரான மெய்கண்டானும், நெடுமாறனும் மருத்துவக் கல்வி பயின்று வருகின்றனர்.

புலவரவர்களின் மகளிர் நால்வர்க்குக் கணவன்மார் கல்லூரிப் பட்டம் பெற்ற தகுதி மிக்கவராவர். கடைசித் திருமகள் செல்வி தமிழரசியாரின் கணவனார் திரு. இரா. குமரவேல் அவர்கள் 'நாடகக் கலை' பற்றி ஆய்வுரை எழுதி டாக்டர் பட்டம் பெற்றுள்ள பேராசிரியர்.

இவர்களிடம் தமிழ் பயின்று புலமை பெற்ற செந்தமிழ்த் திருவாட்டியார் இராதா தியாகராசன் அவர்கள் இவர்க்கு 'உரை வேந்தர்' என்ற சிறப்புப் பெயரும், தூத்துக்குடி சைவசித்தாந்த சபையார் 'சித்தாந்த கலாநிதி' (சித்தாந்தக் கலைக்கடல்) என்னும் பட்டமும் வழங்கிப் பாராட்டினர். இவரை 'நாவேந்தர்' எனவும் அழைக்க என் மனம் அவாவுகின்றது.

# கற்றோர்க்குக் கலங்கரை விளக்கம்!

முதுபெரும் பேராசிரியர் டாக்டர் சை.வே. சிட்டிபாபு
(முன்னாள் துணைவேந்தர் மதுரை காமராசர் மற்றும்
அண்ணாமலை பல்கலைக் கழகங்கள்)

உரைவேந்தர் ஔவை துரைசாமிப் பிள்ளை அவர்களின் நூற்றாண்டு விழா இவ்வாண்டு செப்டம்பர் திங்களில் நடைபெற உள்ளது என்பதை அறிய மிக்க மகிழ்ச்சியுறுகிறேன்.

பண்டை உரையாசிரியர்களாகிய நச்சினார்க்கினியர், பரிமேலழகர், அடியார்க்கு நல்லார், சிவஞான முனிவர் போன்ற வித்தகர்களோடு வைத்தெண்ணக் கூடியவர் உரைவேந்தர் ஔவை துரைசாமி பிள்ளை. இவரோடு நெருங்கிப் பழகக் கூடிய வாய்ப்பை நான் பெறாவிடினும், இவரது ஆழ்ந்த புலமையை என் இலக்கிய நண்பர்கள் புகழ்ந்து பாராட்டுவதைக் கேட்டு வியந்துள்ளேன் மற்றும் என் இனிய நண்பர் டாக்டர் ஔவை நடராசன் அவர்களின் திருத்தந்தையார் இவர் என்று நினைக்கும் போது என் உள்ளம் பெருமை கொள்கிறது.

ஔவை துரைசாமி பிள்ளை அவர்களால் புறநானூறு, நற்றிணை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, மணிமேகலை போன்ற பெரு நூல்களுக்கு எழுதப் பெற்ற நயஉரைகள், வரலாற்றுக் குறிப்புகள் பற்றிய செய்திகள் எல்லாம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கனவாகும். பாடல் தோறும் 'விளக்கம்' என்ற தலைப்பில் காணப்படும் செய்திகள் ஆய்வாளர்கட்கும் புலவர்கட்கும் ஒரு கருத்துக் களஞ்சியமாகப் பயன்பட்டு வந்துள்ளது தமிழ் இலக்கிய உலகு அறிந்த ஒன்றாகும். இவரது தன்னிகரற்ற உரைகளுக்காக இவரை 'உரைவேந்தர்' என்று இலக்கியச் சான்றோர்கள் புகழ்ந்து பாராட்டியதை யாரும் மறக்க முடியாததாகும்.

தமிழ்ப் பெரும் புலவர்களின் சீர் சால் பீடமான அண்ணாமலை பல்கலைக் கழகம் ஔவை துரைசாமி பிள்ளையைத் தமிழ்த் துறையில் சேர்த்துக்கொண்டு பெருமையுற்றது. அங்கிருந்த காலைதான் அவர் சைவ சமய இலக்கிய வரலாறு எனும் அருமையான நூலினை எழுதி வழங்கினார். இதோடு சைவ சமயப் பெருநூலான ஞானாமிர்த நூலை ஆய்ந்து விளக்கம் எழுதினார். இதற்காகவே 'சித்தாந்த

கலாநிதி' என்று அவர் புகழ்ந்து போற்றப்பட்டது சாலவும் பொருத்தமானதே!

உரைவேந்தர் உரையெழுதித் தமிழ் உலகிற்கு ஏற்றம் வழங்கிய பணியின் சிகரமாக விளங்கியது வள்ளலாரின் திருவருட்பாப் பாடல்கள் அனைத்திற்கும் தெளிவும் நுட்பமும் திட்பமும் மிகுந்த அவரது உரைவளமாகும். இம்மகத்தான முயற்சியில் முழுமையாக அவரை ஈடுபடச் செய்து பெருந்துணையாக நின்ற பெருமைக்கு உரியவர் அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம் ஆவார்கள்.

உரைவேந்தராக மட்டுமல்ல நாவேந்தராகவும் திகழ்ந்தவர் ஒளவை துரைசாமி பிள்ளை அவர்கள். தமிழ்ப் பேராசிரியராக அவர் உருவாக்கிய எண்ணற்ற மாணவர்கள் தகைசால் அறிஞர்களாயினர்.

சென்ற நூற்றாண்டில் தமிழ் உரை உடை வளர்ச்சிக்குத் துணை புரிந்தவர் ஒளவை துரைசாமி அவர்கள். தம் காலத்து மக்களிடம் தமிழ் சிறந்தோங்க உழைத்தவர். பழைய உரையாசிரியர் நடையில் அமைந்த தமிழ் வளம் இவர் படைப்புகளில் காணலாம். ஆயின் தமிழ் ஒருவாறு கற்றவர்களுக்கும் விளக்கமாகும் வகையிலும் எழுதியவர். எளிமையும் இனிமையும் இவருடைய நடையின் சிறப்பியல்புகள் எனலாம். சிறந்த ஆராய்ச்சி உண்மைகள், அறிவுலகச் சிந்தனைகள் ஆகியவைகளோடு ஆராய்ச்சி நெறியினை அறிவித்த ஒரு முன்னோடி என்று ஒளவை அவர்களைக் கருத வேண்டும். இப்பெருமகனாரின் நூற்றாண்டு விழா வெற்றிகரமாக நடைபெறுவதாக!

இலக்கண நூற் பெரும்பரப்பும் இலக்கியநூற்
பெருங்கடலும் எல்லாம் ஆய்ந்து
கலக்கமறத் துறைபோகக் கற்றுணர்ந்த
பெரும்புலமைக் கல்வி யாள!
விலக்ககிலாத் தருக்கநூல், மெய்ப்பொருள்நூல்,
வடமொழிநூல், மேற்பால் நூல்கள்
நலக்கமிகத் தெளிந்துணர்ந்த நற்கலைஞ!
நின்வருகை நன்றே யாக!

– ந. ரா. முருகவேள்.

# ஆசிரியர் பிரான் ஔவை

கோமான் ம.வி. இராகவன்
(நாடறிந்த நல்லாசிரியர் - ஔவை அவர்களின் தலைமாணவர்)

இருபதாம் நூற்றாண்டு நம் தாய்மொழியாம் தமிழ்மொழி மறுமலர்ச்சியுற்று மாண்பு பெற்ற காலம். இந்நூற்றாண்டில் தம் நலமும், தம் முன்னேற்றமும் கருதாது தமிழின் மறுமலர்ச்சியே குறியாக அல்லும் பகலும் அயராதுழைத்த நல்லிசைப் புலவர் பெருமக்கள் பல்லோராவர். அவருள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர் 'உரைவேந்தர்' என்று புலவருலகம் ஒரு சேரப் புகழ் கூறும் செந்தமிழ்ச் செல்வராகிய ஔவை துரைசாமிப் பிள்ளையவர்கள், தமிழ் வளர்த்த தனிப் பெருமைக்குரிய மதுரையம் பதியில் கல்லூரிப் பேராசிரியராகப் பல்லாண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள பிள்ளையவர்கள் மறைவைக்கேட்டுத் திடுக்குற்றேன். ஈரம்மலிந்த என் விழிகளோடு என் நினைவும் ஐம்பதாண்டுகள் பின்னோக்கிச் செல்கின்றது.

## தெரிந்தெடுத்த அருந்தமிழ் ஆசிரியர்:

நாற்பதாண்டு கட்குமுன் பிள்ளையவர்கள் உயர்நிலைப் பள்ளியொன்றில் தலைமைத் தமிழாசிரியர்! நான் தகுதி வாய்ந்த தமிழாசிரியரைத் தேடி அலைந்து கொண்டிருந்த தமிழார்வம் கொண்ட இளைஞன். உடற்பிணியின் குறுக்கீட்டால் என் ஆங்கிலப் பயிற்சி இடையில் தடைப்பட்டது. பிணியினின்றும் விடுபட்டபின் விட்ட ஆங்கிலப் பயிற்சியைத் தொட்டுத் தொடர விருப்பமின்றித் தமிழ் பயிலத் தொடங்கினேன். புலவர் சிலரை அடுத்துச் சிறுநூல்கள் பலவற்றைப் படித்து முடித்த நான் பெருங்காப்பியங்கள், சங்கத் தொகை நூல்கள், பேரிலக் கணங்கள் ஆகிய பெருநூல்களைத் தொடர்ந்து பயின்று பல்கலைக்கழகப் புலவர் (வித்துவான்) தேர்வு எழுத விரும்பினேன். அதுபோது அருகிலிருந்த புலவர்களுள் எவரையும் அப்பெருநூல்களைப் பாடம் சொல்லுவதற்குரிய தகுதி வாய்ந்தவராக என் மனம் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே ஓராண்டுக் காலம் வறிது கழிந்தது. காலக் கழிவை எண்ணிக் கவன்றிருந்த நிலையில் என் நல்வினைப் பேறாகப் பிள்ளையவர்கள் சேயாறு கழக உயர்நிலைப் பள்ளிக்குத் தலைமை தமிழாசிரியராக வந்து சேர்ந்தார்கள். (1931)

பணியேற்ற சில நாட்களுக்குள்ளேயே பிள்ளையவர்களின் புகழ் வெள்ளமென எங்கும் விரைந்து பரவலுற்றது. பள்ளி மாணவர்களும், ஆசிரியர்களும், நகர அறிஞர்களும் அவரைப் பற்றிப் பெருமையாகப் பாராட்டிப் பேசலானார்கள். ஏற்ற ஆசிரியரை எய்தப் பெறாமல் ஏக்கமுற்றிருந்த யான் ஊக்கம் பெற்று அவரை நேரில் ஆய்ந்தறியத் தொடங்கினேன். அவர் பிறரோடு பழகும் பண்பையும், பள்ளியில் பாடம் நடத்தும் பாங்கையும் கவனித்தேன். உரையாற்றும் அவைகட்குச் சென்று அவர் சொற்பொழிவுகள் பலவற்றைக் கேட்டேன். நான் எதிர்பார்த்த தகுதிகள் யாவும் அவரிடம் ஏற்றமுற நிறைந்திருப்பது கண்டு, என் தமிழ்ப் பசியைத் தணிவிக்கும் தகவுடையார் அவரே எனத் தெளிந்து, அவரை அணுகி என் விருப்பத்தைக் கூறி வேண்டிக் கொள்ளத் துணிந்தேன்.

*பூவேத்தப் பழுஞ்சைவப் பயிர்விளைத்த புகழ்ப்பிள்ளை*
*நாவேத்தத் திருவோத்தூர் நயந்தேற்றா ரருள் செய்வென்*

*வரைசாமி யரங்கமென மகிழ்ந்தாடு மனத்தௌவை*
*துரைசாமி! அருந்தமிழன் சுவைகனிந்த புலவ! கேள்*

*உலகுவளை கடல்மடுத்த வொருமுனியு மாற்றாமே*
*விலகு தமிழ் வியன்கடலை வியப்புறுமா றுண்டனைநீ!*

*உற்றுயர்வான் கலையனைத்து முறைகுற்ற மூன்றுமறக்*
*கற்றுயர்வான் வருமவர்க்குக் கற்பகம்போனின்றனை நீ!*

*சொல்வன்மை யஞ்சாமை சோர்வின்மை யொடுவாதில்*
*வெல்வன்மை யும்முடைய வித்துவச் சிகாமணி நீ!*

*கம்பர்கவிக் கவினையுமுட் கரந்தமைந்த பொருட்சுவையு*
*மிம்பருனைப் போலெவர்மற் றினிதறிந்தார்?*
*எடுத்துரைத்தார்?*

*பன்மொழிக்குந் தாயாகிப் பரந்துலவுந் தமிழ்க்கன்னி*
*நன்மொழிக்கு நாயகனாய் நவிறலுநிற் குயர்வேயோ!*

*குன்றளிக்குங் குமரனருள் கொழுந்தமிழை யன்றேபோ*
*லின்றளிக்குந் தலைவனீ யெனலு நினக்கிசையேயோ!*

**அஃதன்று**

*ஓயா தொழுகுஞ் சேயாற் றடைகரை*
*விளங்கு மோத்தூர் வியனக ருயர்நிலைப்*
*பள்ளி மாணவர் கள்ள மின்றி*
*யாற்றிய தவத்தி னாசிரி யத்தொழி*
*லேற்றவர் தம்மட மாற்று மொண்புலவ!*
*சிறியேன் தமிழிற் பேரவாக் கொண்டு*

சிலரை யண்ம யிலக்கிய விலக்கணஞ்
சிறிது பயின்றுளேன்; செம்மல்! நின்றிறங்கேட்
டரியவை யறிவா னார்வமுற் றடைந்தனென்
குலனருள் வாய்ந்த குரவ! யாற் கிரங்கி
யொல்காப் பெருமைத் தொல்காப்பியமொ
டேனை யைவகை யிலக்கண நூல்களும்
பல்காப் பியங்களும் பரிந்தனை பயிற்றிப்
பல்கலைக் கழகம் நல்கும் 'வித்துவான்'
பீடுறு பட்டம் பெறவெற் கருண்மதி
அருளுவை யாயின் பொருளிலாச் சிறியேன்
காலந் தன்னிற் சீல! நீ புரியும்
ஞாலந் தன்னினுஞ் சாலப் பெரிதாம்
நன்றி யிதனை யென்று
மறவா துள்ளி மகிழ்ந்து வாழ்த்துவனே'

என்னும் பாடலை இயற்றி எடுத்துக்கொண்டு ஒரு ஞாயிற்றுக் கிழமை காலை பிள்ளையவர்களின் இல்லத்திற்குச் சென்றேன். அவர் வெளித் திண்ணையில் புத்தகக் குவியல்களுக்கிடையே சிறிய சாய்வு மேசையின் முன் அமர்ந்து ஏதோ குறிப்பெடுப்பதில் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருந்தார். நான் வணக்கம் கூறி முன்னே நின்றேன். அவர் நிமிர்ந்து பார்த்து, இருக்கப் பணித்து, என்னைப் பற்றி உசாவலுற்றார். நான் சுருக்கமாக என்னை அறிமுகப் படுத்திக்கொண்டு எடுத்துச் சென்றிருந்த பாடல் தாளை அவரிடம் கொடுத்தேன். அவர் பாடலை ஊன்றிப் படித்துப் பார்த்துவிட்டு, 'இதுயார் எழுதித் தந்தது?' என்று கேட்டார். 'நான் இயற்றியதே' என்றேன். 'பழகிப் பண்பட்ட பண்டிதர் பாடலாக இருப்பதால் கேட்டேன். இதில் என்னைப் பலவாறு சிறப்பித் திருக்கிறீர்களே, அச்சிறப்புக்களை என்னிடம் எவ்வாறு கண்டீர்கள்?' என்றார். நான் அவர் அறியாமலே அவரைப் பல நாட்கள் ஆராய்ந்ததையும், அவ்வாராய்ச்சியில் கண்டவற்றுள் சிலவே அவை என்பதையும் எடுத்துரைத்தேன். அதனை அடுத்து 'நீங்கள் யார் யாரிடம் என்னென்ன நூல் படித்திருக்கிறீர்?' என்று வினவினார். நான் பாடங்கேட்ட புலவர்களையும், அவர்களுள் ஒவ்வொருவரிடமும் படித்து முடித்த நூல்களையும் வரிசையாகக் கூறினேன். 'உங்கள் தகுதியையும், உணர்ச்சியையும், வேட்கை விருப்பத்தையும் இப்பாடலிலிருந்தே உணர்ந்து கொண்டேன். உங்களுக்குப் பாடம் சொல்லுவதில் மகிழ்ச்சியே. நல்ல நாள் பார்த்துக் கொண்டு வாருங்கள்' என்றார்,

நான் 'நாள் பார்த்துக் கொண்டே வந்துள்ளேன். இன்று நல்ல நாளே' என்றேன். அவர் 'அப்படியானால் இன்றே தொடங்கிவிடுவோம்' என்று கூறி, ஒரு தாளில் சில பாடல்களை

2.3

எழுதி என்னிடம் தந்து, 'இப்பாடல்களைப் படியுங்கள். ஒவ்வொரு நாளும் பாடம் தொடங்கும் பொழுது முதலில் இவற்றைச் சொல்லவேண்டும்' என்றார். அப்பாடல்கள் அகத்தியர், தொல்காப்பியர், திருவள்ளுவர், சேனாவரையர், நச்சினார்க்கினியார், பரிமேலழகர் ஆகிய புலவர் பெரு மக்களுக்கு வணக்கம் கூறுவனவாக இருந்தன. நான் முன்னமே இயற்றியிருந்த

முத்தலை நெடுங்கடல் முழுது முண்டலர்
புத்தமிழ் துகுபொழில் பொதிய மேவிய
வித்தக முனிவரன் வளர்த்த மெல்லியல்
முத்தமிழ்க் கிழத்தியை முடிவ ணங்குவோம்

என்னும் தமிழ் மொழி வாழ்த்துப் பாடலை முதலிற் கூறி. பின் அப்பாடல்களையும் படித்தேன். முதலில் திருக்குறளை எடுத்துக் கொள்வோம் என்று கூறி, தம் புத்தகத்தையே கொடுத்து உரைப்பாயிரத்திற்கு வியப்புறும் வகையில் விளக்கம் கூறியபின், கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் உள்ள ஒவ்வொரு குறளுக்கும் பரிமேலழகர் உரையையும் பிறர் உரைவிகற்பங்களையும் தமக்கே உரிய தனிமுறையில் தடைவிடைகளால் தெளிவாக விரித்து விளக்கிமுடித்தார். அன்று முதல் நிழல்போல் அவரை நீங்காமல் உடனிருந்து, தொடர்ந்து ஐந்தாண்டுகள் அரிய இலக்கிய இலக்கணங்கள் பலவற்றையும் முறையாகப் பயின்று சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் தேர்வு எழுதி முதல் வகுப்பில் மாநிலத்தில் இரண்டாமவனாகத் தேறி சென்னையில் உள்ள மிகப் பெரிய உயர்நிலைப் பள்ளியொன்றில் தலைமைத் தமிழாசிரியனாக அமர்ந்து, முப்பது ஆண்டுகட்குமேல் தொடர்ந்து பணியாற்றினேன். இந்நிலைக்கு என்னை உருவாக்கி, வழிகாட்டி, வாழவைத்த வள்ளல் பிள்ளையவர்களேயெனின் அவர் பெருமைக்கு வேறு சான்று வேண்டுவதில்லை.

## உழைப்பால் உயர்ந்தவர்

பிள்ளையவர்கள் உழைப்பின் உயர்வுக்கு எடுத்துக்காட்டு. அவர் வாழ்வு ஓயா உழைப்பினால் உருவானது, அவர் இன்றைக்கு எண்பதாண்டுகட்கு முன் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள ஔவையார் குப்பம் என்னும் சிற்றூரில் எளிய குடும்பம் ஒன்றில் தோன்றினார். இளமையில் பல வேறு இன்னல் இடையூறுகட்கிடையில் உழைத்துப் படித்து இண்டர்மீடியட்டில் முதலாண்டு மட்டும் பயிலத்தொடங்கி, தொடர்ந்து படிக்கக் குடும்பநிலை இடந்தராமையால் நகராண்மைக் கழகத்தில் நலத்துறைக் கண்காணி (Sanitary Inspector) யாக வாழ்வைத் தொடங்கினார். இயற்கையில்

அறிவும், ஆற்றலும் சிறக்கப் பெற்ற இளைஞராகிய பிள்ளையின் வளமை கண்ட தமிழன்னை அவர்மீது தன் அருள் நோக்கைச் செலுத்தி அவரை ஆட்கொண்டாள். அவர் உள்ளத்தில் தமிழார்வம் ஊறிச் சுரக்கலுற்றது. அவர் நகராண்மைக் கழகப் பணியை விடுத்துக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தை அடுத்து, நாவலர். ந.மு. வேங்கடசாமி நாட்டார். கவியரசு, வேங்கடாசலம்பிள்ளை போன்ற பெரும் புலவர்களிடம் அருந்தமிழ் இலக்கிய இலக்கணங்களைத் திருந்தக் கற்றுத் திறமான புலமை பெற்று, சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் தேர்வில் சிறப்புறத் தேறிப் பட்டம் பெற்றார். பின்னர் வடஆர்க்காடு மாவட்டக் கழகத்தில் தமிழாசிரியராகச் சேர்ந்த சில ஆண்டுகள் பல உயர்நிலைப் பள்ளிகளில் பலரும் பாராட்டும் வகையில் பணியாற்றினார். பின்னர் திருவேங்கடவன் கீழ்த்திசைக் கல்லூரியில் பேராசிரியர் பதவியேற்றுச் செந்தமிழ்ப் பணிபல சிறக்கச் செய்தார். அடுத்து அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆராய்ச்சித் துறை அவரை அழைத்து அமர்த்திக் கொண்டது. அங்கு அமர்ந்த அவர், கல்வெட்டு ஆராய்ச்சியிலும், மொழி வரலாற்று ஆராய்ச்சியிலும் பங்கு கொண்டு பயனுள்ள பணிபல புரிந்தார். இறுதியாகச் சங்கமிருந்து தமிழ் வளர்த்த மதுரையம்பதி பிள்ளையை வரவேற்றது. அங்கு அவர் தியாகராசர் கல்லூரியில் பேராசிரிய ராகப் பல்லாண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார். பதவியினின்று ஓய்வு பெற்றாரேயன்றிப் பணியினின்றும் ஓய்வு பெற்றாரில்லை. பதவி ஓய்வைப் பயன்படுத்திக் கொண்டு செந்தமிழ்த் தொண்டைத் தொடர்ந்து செய்து வந்தார்.

ஆசிரியத் துறையில் பிள்ளையவர்கள் எய்திய இவ்வுயர்வு இயல்பாக அமைந்த வளர்ச்சியே ஆகும். ஆசிரியருக்கு உரிய அரிய பண்புகள் அனைத்தும் அவருக்கு இயற்கையிலேயே இனிதமைந்திருந்தன. பிறவியாசிரியாராகிய அவர் அத்துறையில் தமக்கென்று தனிமுறை ஒன்றை வகுத்துக் கடைப்பிடித்து, அப்பண்புகளைப் பேணி வளர்த்துக் கொண்டார்; அவ்வளவே. அவர் சிலர் போலத் தாம் உலகியல் வாழ்வில் உயர்வதற்கு வேண்டும் வசதிகளைப் பெற விரும்பியிருப்பாராயின், ஆங்கில மொழியில் அவருக்கு இருந்த தேர்ச்சிக்கும், தமிழ் மொழியில் அவருடைய ஆழ்ந்தகன்ற புலமைக்கும் அரிய ஆராய்ச்சி அறிவுக்கும் எம்.ஏ. (M.A.) பி.எச்.டி. (Ph.D.) போன்ற பயன்தரும் பட்டங்கள் பலவற்றை எப்பொழுதோ எளிதில் பெற்றிருக்கலாம். தம்மைப் பற்றிய நினைவே, தம்முன்னேற்றம் பற்றிய சிந்தனையே சிறிதும் இன்றி, தாம் குறிக்கொண்ட தமிழ்த் தொண்டுக்குத் தம்மைப் பயன்படுத்திக் கொள்வதிலேயே கருத்தாயிருந்தார்

அவர். உயர்நிலைப் பள்ளி ஆசிரியராக இருந்த நாள் தொட்டு அவர் அதற்காக அயராது உழைத்தார். அவர் உழைப்பை உடனிருந்து காணும் வாய்ப்புப் பெற்றிருந்த நான் அதனை இன்று நினைக்கினும் அது என்னை நின்று நடுங்கச் செய்கிறது.

பள்ளியில் பாடம் நடத்தும் நேரம் நீங்க மற்ற நேரத்தில் ஒரு கணமும் ஓயாமல் ஒழியாமல் உழைத்தார். பள்ளியை விட்டு வீடு வந்ததும் திண்ணையில் புத்தகங்களைப் பரப்பிக் கொண்டு அமர்ந்து விடுவார். படிப்பதிலும், ஆராய்வதிலும், குறிப்பெடுப்பதிலும் சுற்றுப் புறத்தை மறந்து சுறுசுறுப்பாக ஈடுபட்டு விடுவார். அப்பொழுது அவர் குடியிருந்த வீட்டில் மின் விளக்கு வசதி இல்லை. இரவில் எண்ணெய் விளக்கின் முன்இருந்து நெடுநேரம் வரையில் எடுத்த குறிப்புக்களைக் கொண்டு கட்டுரை, ஆய்வுரை, மறுப்புரை, நூலுரைகள் எழுதுவார். அவர் எப்பொழுது உறங்குவார். எத்தனை நேரம் உறங்குவார் என்பவை யாருக்கும் தெரியா. விடியற்காலம் விழித்துப் பார்த்தால் விளக்கின்முன் அமர்ந்து விரைவாக எதையோ வரைந்து கொண்டிருப்பார். விடிந்தபின் பள்ளி செல்லும் வரையில் அதே உழைப்பு! அல்லென்றும் பகலென்றும் பாராமல், ஊணும் உறக்கமும் நினையாமல் பிள்ளையைப் போலத் தமிழுக்காகப் பேயுழைப்பு உழைத்தவர்களை நான் கண்டதில்லை. ஓய்வு என்பது இன்னதென்று அறியாத ஓர் அற்புதப் பிறவி அவர். அவர் மேற்கொண்ட முயற்சியில் அவருக்குத் துணை செய்யும் அறிவும் ஆற்றலும் பண்பும் வாய்ந்த புலவர்களோ, அன்பு கொண்டு ஆதரவு காட்டும் செல்வர்களோ அக்காலத்தில் இல்லை. ஆனால் அவர் ஆக்கம் கண்டு ஆற்றாது அழுக்காற்றால் புறங்கூறப் புல்லறிவினோர் பலர் இருந்தனர். பிள்ளையவர்கள் பிறர் துணை நாடாமல், புல்லறிவாளரின் பொறாமையையும் புறங்கூறுதலையும் பொருட்படுத்தாமல், தமக்குத் தாமே முயன்று பண்படுவதில் முனைந்து உழைத்தார். அன்று அவர் உழைத்த அவ்வுழைப்பே பின்னர் அவரைப் பண்டை உரையாசிரியர்கள், வரிசையில், அவர்களோடு சரியாசனத்தில், ஏற்றி, ‘உரைவேந்தர்’ என்று புலவருலகம் புகழ் கூறும் உயர்நிலையை எய்துவித்தது.

## எளிமையில் வளமை

பழந்தமிழ்ப் புலவர்களின் பண்பட்ட வாழ்க்கை சங்கத் தமிழ் நூல்களில் நன்கு விளக்கப்பட்டுள்ளது. அவர்கள் பரிசில் வாழ்க்கையினராயினும் வரிசைக்கு வருந்துவோராகவும், மண்ணாளும் மன்னரைப் போன்ற மாண்புடையவராகவும், தார்வறியாமல் வாழ்வாங்க வாழ்ந்தனர். அவர் வாழ்வு

எளிமையில் வளமை கண்ட வாழ்வு. வாழ்வின் எளிமை; சிந்தனையில், சொல்லில் செயலில், உயர்வு; இதுவே பிள்ளையவர்களின் பெருமை நான் பழகிய காலத்தில் பிள்ளையவர்கள் குடும்பம் மிகச் சிறியதொன்றே. அந்நாளில் தமிழாசிரியர்களின் ஊதியம் மிகக் குறைவு. வேறு வருவாய்க்கும் வழியில்லை. எனவே பிள்ளையின் வருவாய் அச்சிறிய குடும்பத்தையும் செம்மையாக ஓம்புதற்குப் போதியதாக இல்லை. எனினும் அவர் குறைந்த வருவாயைக் கொண்டு நிறைந்த உள்ளத்தோடு நேர்மை தவறாமல் நிமிர்ந்து வாழும் நெறியாளராக விளங்கினார். எளிய உடையையும் எடுப்பாக உடுக்கும் கலை அவருக்குக் கைவந்திருந்தது. கவலைக் குறியின்றிக்களை தவழும் முகத்தோடு கலகலப்பாகச் சிரித்து உரையாடும் சீரிய பண்பு அன்றோ அவர் பால் சிறப்பாக அமைந்திருந்தது. எந்நிலையிலும் தம் கொள்கைகளை விட்டுக் கொடுக்கவோ, கருத்துக்களை மாற்றிக் கொள்ளவோ அவர் இணங்கியதில்லை. அதனால் இடுக்கண் நேர்ந்த பொழுது நடுக்கமுறாமல் அதனை நகைமுகத்தோடு ஏற்று நலியச் செய்யும் மிடுக்குடைமை அவரது சிறப்பியல்பாகும். வாழ்விலும் பிறரோடு பழகும் முறையிலும் எளிமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கினா ரெனினும் ஏக்கழுத்தும் பீடு நடையும் கொண்ட ஏற்றம்மிக்க தோற்றம் அவருக்குப் பிறவிப் பேறாக வாய்த்திருந்தது.

## அடக்கமும் அஞ்சாமையும்

பிள்ளையவர்கள் கடல் போன்ற கல்வியினராயினும் அவரிடம் தருக்கோ, தற்பெருமையோ தலைகாட்டக் கண்டாரிலர். தன்னடக்கத்திலும் நன்னடக்கையிலும் அவர் ஆன்றவிந்தடங்கிய சான்றோர் வரிசையில் வைத்து மதிக்கத்தக்க மாண்புடையவர். அவரைப்போல ஆரவாரத்தில் ஆர்வம் காட்டாமல், பாராட்டையும் புகழையும் எதிர்பாராமல், 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் கொள்கையைக் கடைப் பிடித்து அமைதியாகத் தமிழ்ப்பணியில் ஆழ்ந்திருந்தவரைக் காண்டல் அரிது. நீர் தளும்பாத நிறைகுடம் போல ஆரவாரமின்றி அமைந்தொழுகிய பிள்ளையவர்கள் அறியாத ஒன்றும் உண்டு. அதுவே அச்சம். பழந்தமிழ்ப் புலவர்களைப் போலவே அவர், அச்சம் அறியாத அண்மையர். அவையஞ்சாமை அவருக்குக் கருவிலே வாய்த்த திருவாகும். தாம் உண்மை என்று கொண்டதை எவரிடையிலும் வன்மையோடு நிலை நிறுத்தும் உறுதியும், தவறு என்று கண்டதை அதற்குரியார் யாராயிருப்பினும் தயை தாட்சணியமின்றி அஞ்சாமல் அழுத்தமாக மறுத்துக் கூறும் துணிவும் உடையவர் அவர்.

வாதிடுவாரையும், வல்வழக்காடு வாரையும் வாயடங்கச் செய்யாமல் வணங்கிப் போனதை அவர் வாழ்வில் காண முடியாது. ஆயினும் மாறுபட்டோரிடம் பகைமை பாராட்டி மரியாதைக் குறைவக நடந்து கொள்ளும் இழிகுணம் அவரிடம் இடம் பெற்றதில்லை. அவர்களிடம் அன்பு காட்டி நண்பு கொண்டு பண்பாகப் பழகும் பான்மை அவரது மேன்மையாகும்.

## செய்ந்நன்றி மறவாச் சீர்மை

செய்ந்நன்றி மறவாது போற்றும் சீர்மையிலும் பிள்ளை யவர்கள் பண்டைப்புலவர்களோடு ஒப்பவைத்து மதிக்கத்தக்க உயர்வுடையவர். அவர்பின் எய்திய உயர் நிலைக்கு அடிகோலிய ஆசிரியப் பெருமக்களாகிய நாவலர், நாட்டார், கரந்தைக் கவியரசு ஆகியோரிடம் அவர் கொண்டிருந்த பற்றும் வைத்திருந்த மதிப்பும் அளவிடற்கரியவை. அவர்களுடைய கல்விச் சிறப்பையும் பாடம் சொல்லும் திறத்தையும் அவர் உணர்ச்சி பொங்கப் பாராட்டிப் பேசியதை நான் பலமுறை கேட்டிருக்கிறேன். அவரிடம் தமிழ் பயின்ற மாணாக்கர்களை ஒவ்வொரு நாளும் பாடம் தொடங்கு முன், தொல்காப்பியர் முதலிய புலவர் பெருமக்கட்கு வணக்கம் கூறும் பாடல்களோடு அவர் தமிழ் பயின்ற கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு வாழ்த்துக் கூறும் பாடலையும் சேர்த்துச் சொல்லுமாறு பணித்திருந்தது அவர் அந்நிறுவனத்தினிடம் கொண்டிருந்த நன்றியறிவுக்குச் சான்றாகும். கரந்தைத் தமிழ்ச் சங்கம் கண்ட உமாமகேசுரம் பிள்ளையை அவர் தம் நினைவில் நிலையான இடம் தந்து மறவாது போற்றி வந்த மாண்பை அவர் நண்பர்கள் நன்கு அறிவர்.

## புலமை நலம்

பிள்ளையவர்களின் புலமை பள்ள நீர்க்கடல் போன்று அளந்தறிதற்கரிய ஆழமுடையது; விரிந்தகன்ற வானம் போன்று வரைந்துணர்தற்கரிய பரப்புடையது. அசைக்கலாகாத மலை போன்று அலைக்கலாகாத திட்பம் வாய்ந்தது. எந்த நூலையும் மேற்போக்காகப் படித்து முடிக்கும் பழக்கம் அவருக்கு இல்லை. படித்தது போதுமென்று விடுத்திராமல் பல நூல்களையும் பலமுறை பயின்று நயங்கண்டு பயன் கொள்ள முயல்வது அவர் இயல்பு; அரிய நூற்பொருள்களையும் துருவியாராய்ந்து கடிதிற் கண்டு நெடிது போற்றுவது அவர் சிறப்பு. சங்கத்தொகை நூல்கள், திருக்குறள், பெருங்காப்பியங்கள் சிறு காப்பியங்கள், கம்பராமாயணம், பெரியபுராணம் ஆகிய இலக்கியங்களும், தேவாரம், திருவாசகம், திவ்வியப் பிரபந்தம், சைவ சாத்திரங்கள் ஆகிய சமய நூல்களும், தொல்காப்பியம், பிரயோக விவேகம்,

வீரசோழியம், இலக்கண விளக்கம், இலக்கண விளக்கச் சூறாவளி, யாப்பருங்கலம் ஆகிய இலக்கண நூல்களும் அவற்றிற்குப் பண்டையாசிரியர்கள் கண்ட உரைகளோடு அவருக்கு மனப்பாடம். இலக்கியத்தினும் இலக்கணத்தில் அவருக்கு ஈடுபாடு மிகுதி. தொல்காப்பியத்தில் அவருக்குள்ள தேர்ச்சியும், அதன் பல்வேறு உரைகளில் அவர் அரிதில் முயன்று பெற்றுள்ள பயிற்சியும், ஆராய்ச்சியும் நான் அறிந்து அனுபவிக்கும் பேறு பெற்றவை. இலக்கியங்களுள் சிறப்பாகச் சங்கத்தொகை நூல்களிடத்தும், திருக்குறளிடத்தும் அவர் ஆழ்ந்த ஆர்வம் கொண்டவர். முற்காலக் காப்பியங்களுள் சிந்தாமணியும், பிற்காலக் காப்பியங்களுள் கம்பராமாயணமும் அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவை. சிந்தாமணியின் தமிழ்ச்சுவையையும், கம்பராமாயணத்தின் கவிச் சுவையையும் அவர் தெவிட்டாமல் நுகர்ந்து திளைப்பவர்.

பிள்ளையவர்களின் புலமை ஒருநெறிக்கு உட்பட்ட தன்று; பல துறைகளிலும் பாய்ந்து பரவியது. இலக்கியம், இலக்கணம், சமயம், அளவை, வரலாறு, கல்வெட்டு ஆகிய பல்வேறு துறைகளுள் ஒவ்வொன்றிலும் தனித்தனிப் புலமை பெற்றவர் பலர் இருக்கக் கூடும். ஆனால் பிள்ளையவர்களைப் போல அவ்வனைத்தினும் ஆழ்ந்தகன்ற புலமை பெற்றவர் அரியராவர். அவர் எடுத்துக்கொண்ட நூல் எதுவாயினும் அதனைப் படித்தறிவதோடு அமையாமல் தம்நுண்மாண் நுழை புலத்தால் நுணுகி ஆராய்ந்து அதன் உண்மைப் பொருளை உணர்வதில் ஆர்வமும் முயற்சியும் உடையவர்; பிறர் கடுமையானவை என்று கருதிக் கைவிடும் நூல்களைக் கைக்கொண்டு பொறுமையாகப் பலகால் பயின்று பயன் கண்டு மகிழும் பண்புடையவர். அவர் புலமை பழமையினின்றும் மலர்ந்து புத்தொளிகாணும் புதுமையது. பிறர் சிலரைப் போலப் பழைய நூல்களையும் உரைகளையும் பழித்து ஒதுக்குவதும், புதுமை மோகத்தால் மரபோடு மாறுபட்ட பொருந்தாத புதுக்கருத்துக்களைப் புகுத்திப் போலிப்புகழ் பெற முயல்வதும் ஆகிய புன்மைக்குணம் அவரிடம் இல்லை. அவ்வாறே புதுமைக்கு இடங்கொடாமல் பழமையையே பற்றி நிற்கும் பிடிவாத குணமும் உடையவர் அல்லர். அவர் தம்மிடம் பாடங்கேட்கும் மாணாக்கர்களைப் பாடம் தொடங்குமுன் பரிமேலழகர், நச்சினார்க்கினியர் போன்ற பண்டை உரையாசிரியர்கட்கு வணக்கம் கூறும் பாடல்களை ஓதுமாறு வற்புறுத்தி வந்தது அவர்களிடத்தும் அவர்களுடைய உரைகளிடத்தும் அவருக்கிருந்த பற்றையும் மதிப்பையும் விளக்குவதாகும். ஆனால் அவர் வேறு சிலர்போல உழுத சால் வழியே உழுது செல்லும் இழுதை நெஞ்சினர்

அல்லர். அவர் பண்டையாசிரியன்மாரின் கருத்துக்களோடும் உரைகளோடும் மாறுபட்டுப் புதுக் கருத்துக்களையும் உரைகளையும் கண்டு கூறத் தயங்கியதில்லை. ஆனால் அத்தகைய இடங்களில் அவர்கள் அவ்வாறு கருதியதற்கும் உரை கூறியதற்கும் உரிய காரணங்களை ஆராய்ந்து கண்டு அவற்றின் பொருத்தத்தைத் தெளியத் தெரிந்து கொண்டு, பின்னர் அவர்களைக் குறை கூறாமலும், அவர்களுடைய கருத்துக் களையும் உரைகளையும் இகழ்ந்து விலக்காமலும், அவற்றிற்கு மாறாகத் தாம் கொள்ளும் புதுக்கருத்துக்களையும் காணும் உரைகளையும்கூறி அவற்றின் சிறப்பைக் காரணம் காட்டி விளக்குவது வியப்புக்குரிய அவரது சிறப்பியல்பாகும். இங்ஙனம் பழமைக்கு அமைதி கண்டு புதுமைக்கு வழிகோலும் பிள்ளையவர்களின் புலமைத் திறம் பிறரிடம் காண்டற்கரிய தொன்று.

பிள்ளையவர்கள் பெரும்புலவர் பலராலும் நன்கு மதிக்கப் பெற்றவர். டாக்டர். உ.வே. சாமிநாதையர், மறைமலையடிகள், பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார், மகாவித்துவான், மு. இராகவையங்கார், திரு.வி.க., சச்சிதானந்தம் பிள்ளை, எஸ்.. வையாபுரிப்பிள்ளை, சேதுப்பிள்ளை, கா. நமசிவாய முதலியார் போன்ற புலவர் பெருமக்கள், யான் பிள்ளையவர்களின் மாணவன் என்பதால் என்னிடம் அன்பு கொண்டு மதிப்பும் மரியாதையும் காட்டிப் பழகியதொன்றே அவர்கள் பிள்ளையவர்களிடம் கொண்டிருந்த நன்மதிப்புக்கு உற்ற சான்றாகும். பிள்ளையவர்களின் ஆக்கம் கண்டு ஆற்றாது அழுக்காறு கொண்டோர் சிலர் இருந்தனர்; எனினும் பெரும்புலவர் பலரும் அவர் புலமை வளம் கண்டு அவரைப் போற்றவே செய்தனர். பிள்ளையவர்கட்கும் அவர்களிடம் பெருமதிப்பு உண்டு. ஆனால் யாரிடமும் தம்மைத் தாழ்ந்தவராகக் கொண்டு பணிந்தொழுகும் தாழ்வு மனப் பான்மை பிள்ளையிடம் காணப்படாத ஒன்று. எவரிடமும் சரிநிகர் சமானமாகவே பழகுவது அவர் தனிச் சிறப்பாகும்.

## நல்லாசிரியர்

பலதிறப்பட்ட பொதுநலப் பணிகளிலும் ஆசிரியர் பணி அருமை வாய்ந்தது. அதற்குரிய பண்புகள் படிப்பாலோ, பயிற்சியாலோ பெறலாவன அல்ல; பிறவிப் பேறாகக் கருவிலேயே உருவாவதற்குரியன. "குலன் அருள் தெய்வங் கொள்கை மேன்மை, கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை, நிலம் மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும், அமைபவன் நூல் உரை ஆசிரியன்" என நல்லாசிரியர்க்குரிய பண்புகளைத்

தொன்னூல்கள் தொகுத்துக் கூறுகின்றன. பிள்ளையவர்கள் இப் பெறலரும் பண்புகள் அனைத்தையும் கருவிலே வாய்த்த திருவாகப் பெற்ற பிறவியாசிரியர். ஆசிரியராவார் மாணவர் உள்ளத்தில் தம்மாட்டுத் தனிமதிப்பும் மரியாதையும் தம்மிச்சையாகவே தோன்றச் செய்யும் சான்றோராக அமைதல் வேண்டும். அவர்க்கு இன்றியமையாத அடிப்படைப் பண்பு அசைவற்ற தன்னம்பிக்கை; அதனை அடுத்து வேண்டப்படுவன பெருமிதமான தோற்றப் பொலிவு, நகை தவழும் மலர்ந்த முகம், எடுப்பான இனிய குரல், தெளிவான திருத்திய உச்சரிப்பு, அரிய கருத்துக்களையும் எளிய முறையில் எடுத்துச் சொல்லும் சொல்வன்மை, இவை அனைத்தும் பிள்ளையவர்களிடம் சிறப்பாக அமைந்திருந்தன. இப் பண்புகள் மாணவர்களை அவரிடம் "அழலின் நீங்கார் அணுகார் அஞ்சி, நிழலின் நீங்கா நிறைந்த நெஞ்சமொடு" பழகச் செய்தன. அவர் ஒழுக்கமும், உறுதியும், ஒழுங்கும் மாணவர்களை அவரிடம் பக்தியும் பணிவும் கொண்டு ஒழுகச் செய்தன. எத்தகைய துடுக்கான மாணவனும் அவரிடம் அடக்கமின்றி நடந்து கொள்ளத் துணிந்ததில்லை.

## பாடம் சொல்லும் முறை

பிள்ளையவர்கள் உயர்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியராகவும், கல்லூரி, பல்கலைக் கழகங்களில் பேராசிரியராகவும் பணியாற்றியவர். பாட போதனையில் அவர் கையாண்டமுறை புதுமையானது. மாணவர்களைச் சொற்களுக்குத் தனித்தனிப் பொருளுணரச் செய்வதினும் கருத்துக்களை அவர்கள் உள்ளத்திரையில் உருவோவியமாகப் பதியச் செய்வதையே சிறப்பாகக் கருதி, அதற்கேற்பக் கற்பிக்கும் முறையை மேற்கொண்டார். சிறப்பாக, செய்யுட்பாடம் நடத்தும்பொழுது ஒவ்வொரு செய்யுளையும், கருத்து விளங்க, நிறுத்த வேண்டும் இடங்களில் நிறுத்தி, இடத்திற்கேற்ப எடுத்தும் படுத்தும், வலிந்தும் மெலிந்தும் தெளிவாக இசையோடு படித்துக் காட்டுவார். அவர் படிக்கும் பொழுதே பாட்டின் திரண்ட கருத்து மாணவர்களின் மனத்திரையில் முழு உருவம் கொண்டு தெள்ளத்தெளியப் பதிந்துவிடும். கருத்து விளக்கத்தின் துணையால் பாட்டில் உள்ள சொற்கள் பலவற்றிற்கும் மாணவர்கள் தாமே பொருள் உணர்ந்து கொள்வர். அவர்கட்குப் பொருள் விளங்காத அருஞ்சொற்கள் எவையேனும் இருப்பின் கேட்டறிந்து, அவற்றிற்கு மட்டும் பொருள் கூறுவார். பொதுவாக இலக்கண பாடம் என்றால் மாணவர்கள் மருண்டுமயங்கி அஞ்சி விலக்குவது வழக்கம். ஆனால் பிள்ளையவர்கள் இலக்கணம் கற்பிக்கும் இனியமுறை,

2.4.

மாணவர்கள் அதனை விரும்பிக் கேட்டுத் தெளிந்து மகிழச் செய்யும், பிள்ளையிடம் பயின்ற மாணவர்கள் பிற பாடங்களினும் இலக்கணத்திடமே மிக்க ஆர்வம் காட்டியதை நான் கண்டு வியந்திருக்கிறேன். உரைநடைப் பாடம் கற்பிப்பதிலும் அவர் தனி முறையைக் கையாண்டார். பாடத்தின் மையக் கருத்தைக் குறித்துக்காட்டி, ஒவ்வொரு பத்தியிலும் விளக்கப்பட்டுள்ள அதன் கூறுகளை வகைபட விரித்துரைத்து, முடிவில் அவற்றை நிரல்படத் தொகுத்துக் கூறி, மாணவர்கள் உணர்ந்து உளங்கொள்ள வேண்டிய சிறப்புச் செய்திகளை நினைவுறுத்தி முடிப்பார். இதனால் மாணவர்கள் கேட்ட பாடத்தில் தெளிவும் மன நிறைவும் பெறலாயினர்.

பல்கலைக் கழகத் தேர்வு குறித்துப் பிள்ளையவர்களிடம் பழந்தமிழ் இலக்கிய இலக்கணங்களைப் பாடம் கேட்டுப் பயன்கொண்டவர் பலர். அவர்களுள் முதல்வனாகும் பேறு எளியேற்கு வாய்த்த வாழ்வாகும். பேரிலக்கிய இலக்கணங்களைப் பாடம் செல்லுவதில் பிள்ளையவர்கள் உவகையும் உற்சாகமும் உடையவர்; தாம் பலகால் பயின்று அரிதில் ஆய்ந்து கண்ட அரும்பொருள் நுட்பங்களை, தம்மை அடுத்த மாணவர்கள் வருத்தமின்றி அறிந்து பயனடையுமாறு பரிந்து வழங்கும் வள்ளன்மை வாய்ந்தவர். அவர் மாணவர்களை நுனிப்புல் மேயவிடாமல், நூற்பொருளை நுனித்து ஆயவும், ஆய்ந்து அறிந்தவற்றை அஞ்சாமல் பிறர்முன் எடுத்துரைக்கவும், பயிற்சியும் துணிவும் பெறச் செய்வார். அவர் இன்ன இடத்தில் இன்ன நேரத்தில்தான் பாடம் சொல்லுவது என்னும் வரையறை வைத்துக் கொண்டதில்லை. மாலையில் உலாவச் செல்லும் பொழுதும், சொற்பொழிவாற்ற அயலூர்களுக்கு வண்டிப் பயணம் செய்யும்பொழுதும், உடன் தொடரும் மாணவர்கட்கு உரிய இலக்கிய இலக்கணப் பாடப்பகுதிகளில் உள்ள அரியக் கருத்துக்களை அளவளாவும் முறையிலேயே எளிதில் உணருமாறு எடுத்துக்காட்டிச் செல்வது அவர் வழக்கம்.

மாணவர்களின் தகுதியும் தரமும் தெரிந்து, அவர்கள் மனம் கொள்ளுமாறு பாடம் சொல்வதில் பிள்ளையவர்கள் தனித்திறமை வாய்ந்தவர். ஒரு நூலை எடுத்துக் கொண்டால் அதில் உள்ள பாடல்கள் அனைத்தையும் ஒவ்வொன்றாகப் படித்துப் பதம்பதமாகப் பொருள் கூறும் வழக்கம் பிள்ளையவர்களிடம் இல்லை. முதலில் எடுத்துக் கொண்ட நூல் எந்த வகையைச் சார்ந்ததென்பதை எடுத்துக்காட்டி, அதனை அணுகும் முறை, பயிலும் விதம், பொருள் காணும் நெறி, ஆயுள் அடைவு, நயம் காணும் திறம் ஆகியவற்றை விளக்குவார். பின்னர்

பாடல் பயிலும் இடத்தைச் சுட்டி, பாடலின் திரண்ட கருத்தைத் தொகுத்துக் கூறி, அருஞ்சொற்கள், தொடர்களுக்குப் பொருள் விளக்கம் செய்வார். அரிய இலக்கண அமைதிகள், வரலாற்றுச் செய்திகள், புராணக்கதைகள் ஆகியவற்றைச் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பார். சொல் நயம், பொருள் நயம், செய்யுள் நயங்களை மாணவர்கள் உணர்ந்து சுவைக்கச் செய்வார். சில நாட்கள் தொடர்ந்து இம்முறையில் பல பாடல்களை நடத்தப் பின்னர், எஞ்சிய பாடல்களை நாடோறும் சிலவாக மாணவர்களையே இம்முறையில் படித்துப் பொருளறிந்து வரச் செய்வார். அவ்வப்பொழுது அவர்களைச் சோதித்து, குற்றம் குறை காணின் குறித்துக் காட்டித் திருத்தம் செய்வார்; படித்த பாடல்களுக்கு அவர்கள் கண்டவாறு விரிவுரை எழுதிவரச் செய்தும், தலைப்புத் தந்து அப்பாடல்களின் பொருளைத் தழுவிக் கட்டுரை வரைந்து வரச்செய்தும் படித்துப் பார்த்துத் திருத்தித் தருவார்.

தொல்காப்பியம் போன்ற பேரிலக்கண நூல்களைப் பாடம் சொல்வதில் பிள்ளையவர்கள் பேரார்வம் கொண்டவர். அவர் அவற்றைப் பாடம் சொல்லும் முறை, மாணவர்களை அவற்றிடம் ஆழ்ந்த பற்றுக் கொள்ளச் செய்யும். தொல்காப்பியத்தைப் பாடம் சொல்லும் பொழுது தேர்வுக்குரிய ஓர் ஆசிரியன் உரையை மட்டும் விளக்குவதோடு அமையாது உள்ள வேறு ஆசிரியர்களுடைய உரைகளையும் உடன் வைத்து ஒருங்கு விளக்குவார். தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தி, இலக்கணக் கொத்து, இலக்கண விளக்கம், இலக்கண விளக்கச் சூறாவளி ஆகிய தொடர்புள்ள பிற நூல்களையும் சேர நடத்துவார். நச்சினார்க்கினியர், பேராசிரியர், அடியார்க்கு நல்லார், பரிமேலழகர், சிவஞான முனிவர் ஆகியோர் தாம் உரை கண்ட இலக்கிய, சமய நூல்களின் உரைகளில் தந்துள்ள இலக்கணக் குறிப்புக்களை எடுத்துக்காட்டி இனிது விளக்கம் செய்வார். உரையாசிரியர்கள் தம்முள் மாறுபட உரை கண்டுள்ள இடங்களில் ஒவ்வொருவர் உரையையும் தனித்தனியாக விளக்கி, அவர்கள் மாறுபாட்டுக்குரிய காரணங்களை நுணுகி ஆராய்ந்து முடிவு கூறுவார். தொல்காப்பியப் பகுதிகள் பற்றிப் பிற்காலப் புலவர்கள் ஆய்ந்து வெளியிட்டுள்ள ஆய்வுரைகளையும் நூல்களையும் படிக்கச் செய்து, அவர்கள் கொண்ட கருத்துக்களின் வன்மை மென்மைகளைக் காரண காரியத்தோடு விரிவாக விளக்கிக் காட்டுவார். பின்னர், தனித்தனித் தலைப்புக்களில் ஆய்வுரைகள் எழுதி வரச் செய்து படித்துத் திருத்தம் செய்வார். இம்முறையால் மாணவர்கள் தாம் பாடம் கேட்ட நூல்களில் ஐயம், திரிபு, அறியாமையின்றித் தெளிவும்

தேர்ச்சியும் பெறலாயினர். மாணவர்கள் ஒவ்வொரு நூலையும், நூற்பகுதியையும் ஆசிரியரிடம் பாடம் கேட்டே அறிவதினும். ஆசிரியர் வழிகாட்ட, அவ்வழி நின்று தம் முயற்சியால் தமக்குத் தாமே பல்வேறு நூல்களையும் பகுதிகளையும் ஊன்றிப் பயின்று தேர்ந்து தெளியும் திறம்பெற அவர்கட்குப் பயிற்சியளிப்பதையே சிறப்புப் பணியாகக் கருதினார். ஒரு நூலில் தேர்வுக்குரிய பகுதியை மட்டும் படித்தறியச் செய்வதோடு அமையாது, மாணவர்களை அந்நூல் முழுவதையும், அதனோடு தொடர் புடைய பிற நூல்களையும் படித்தறியுமாறு வற்புறுத்துவது அவர் வழக்கம்.

பிள்ளையவர்கள் தம்மிடம் புதியராகப் பயிலவரும் இளமாணவர்கட்குத் தம்மிடம் பயின்றுவரும் முது மாணவர் களைக் கொண்டு பாடம் சொல்ல வைப்பார். அவர்கள் பாடம் சொல்லும் பொழுது உடனிருந்து கவனித்து, தவறும் இடங்களில் திருத்துவார். புதியனவாக வெளிவரும் இலக்கிய, இலக்கண ஆராய்ச்சிக் கட்டுரைகள், நூல்களைப் படித்து, மாறுபட்ட கருத்துக் காணும் இடங்களைக் குறித்துவரச் செய்து, அவை பற்றி விரிவாக விவாதித்து, அவற்றிற்கு மறுப்புரை எழுதி வரப்பணிப்பார். அதனைத் திருத்திப்படி எடுப்பித்து இலக்கிய இதழில் வெளியிடச் செய்வார். அவர் இவ்வாறு செய்வது அவ்வாசிரியர்களிடம் அழுக்காறு அல்லது பகைமை காரணமாகவோ, அவர்கள் கருத்தை மறுத்து அவர்கட்கு இழுக்கு உண்டாக்க வேண்டும் என்னும் எண்ணம் கொண்டோ அன்று; பிறர் கருத்துக்களை ஆயவும் ஆய்ந்து கண்டதை விளக்கி அழுத்தமாக எழுதவும் தம் மாணவர்கட்குப் பயிற்சியளிக்கும் அருள்நோக்கமே அதற்குக் காரணம் ஆகும். இதனால் அவரிடம் பயின்ற மாணவர்கள் பலரும் 'தன்நம்பிக்கையையும்' 'தன் முயற்சியும்' உடையராய், எந்நூலையும் தாமே பயின்றறியும் தனித்திறம் பெற்றதோடு தாம் அறிந்ததைப் பிறர் அறியுமாறு விளக்கிச் சொல்லும் சொல்வன்மையும், விரித்து எழுதும் எழுத்தாற்றலும், துணிவும் உடன் பெற்றனர்.

## நூலாசிரியர்

பிள்ளையவர்கள் இணையற்ற போதகாசிரியர் மட்டுமல்லர்; ஈடற்ற நூலாசிரியருமாவர். தம் கோள் நிறுவவும், தம் பெயர் பரப்பவும், தம் வாழ்வுக்கு வசதி பெறவும் நூலியற்றுவோர் பலர். தமிழ் மொழியின் உயர்நிலையில் உள்ள குறையை நிறை செய்யவும், அதன் நூல்வளம் பெருக்கவும், நூலியற்றுவோர் ஒரு சிலரே. அவ்வொரு சிலருள் பிள்ளையவர்களும் ஒருவராவர். அவர் செய்யுள் இயற்றுவதில்

ஆர்வம் கொண்டிலர். அதனால் அவர் செய்யும் நூல் ஏதும் இயற்றவில்லை. ஆனால் அவர் அவ்வப்பொழுது புனைந்த பாடல்கள் பல உண்டு. அவை யாப்பமைப்பிலும், சொல் நலம், பொருள் வளம், ஓசை நயங்களிலும் சங்கச் சான்றோர், இளங்கோவடிகள், திருத்தக்க தேவர் ஆகிய பழந்தமிழ்ப் பாவலர்களின் பாடல்களை நினைப்பூட்டும் சிறப்பினவாகும். பிள்ளையவர்கள் உரைநடை நூல்கள் இயற்றுவதிலேயே பெரிதும் ஈடுபாடுடையவர். அவர் தமக்கென்று தனி உரைநடை ஒன்றை இனிது அமைத்துக் கொண்டார். அது சொல் அழுத்தமும், பொருள் அழகும், மிடுக்கும் பெருமிதமும் வாய்ந்தது. கதைகள், பாட நூல்கள், எளிய இலக்கியத் திறனாய்வுகள், புதினங்கள் போன்றவற்றை எழுதுவதில் அவர் பொழுதைப் போக்கவில்லை. அருந்தமிழ்ப் புலவர்களும் தனித் தமிழ் மாணவர்களும் படித்துப் பயன் கொள்ளத் தக்க இலக்கிய, இலக்கண, சமய வரலாற்று ஆராய்ச்சி நூல்கள் ஆக்குவதையே நோக்கமாகக் கொண்டார். இவ்வகைகளில் அவர் படைத்துத் தந்துள்ள பயன்கெழு நூல்கள் பலவாகும். சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, சூளாமணி ஆகிய பேரிலக்கியங்கள் பற்றி அவர் எழுதியுள்ள சீரிய நூல்கள் அவரது இலக்கிய ஆராய்ச்சியை எடுத்துக் காட்டுவன. திருவள்ளுவர், சேரமன்னர் வரலாறு, வரலாற்றுக் காட்சிகள் முதலியவற்றில், வரலாற்றுத் துறையில் அவரது ஆராய்ச்சியின் அகலத்தையும் ஆழத்தையும் அளந்தறியலாம். மத்தவிலாசப் பிரகாசம் இவரது மொழிபெயர்ப்புத் திறனுக்கு விழுமிய சான்று. இவையே அன்றி, அவர் இயற்றிய இலக்கண சமய ஆராய்ச்சி நூல்கள் இன்னும் பலவாம். அவர் ஆற்றிய சொற்பொழிவுகள் அடங்கிய களம், பல்வேறு தமிழ் இதழ்களில் அவ்வப்பொழுது வரைந்து வெளியிட்ட கட்டுரைகள், ஆய்வுரைகள், மறுப்புரைகள் எண்ணில.

## உரையாசிரியர்

பிள்ளையவர்கள் பழந்தமிழ்ப் பேரிலக்கியங்கள் பல வற்றிற்கும் யசோதர காவியம், மணிமேகலை ஆகிய காப்பியங்கட்கும் விளக்கவுரை வரைந்து வெளியிட்டு, புலவருலகம் பண்டை உரையாசிரியர்கள் வரிசையில் வைத்து, 'உரைவேந்தர்' என்று புகழ் கூறும் உயர்நிலையை எய்தியமை அனைவரும் அறிந்ததொன்று. தமிழறிஞர் அவர் ஆக்கிய உரை நூல்களைப் படித்து உரை நல்கியதை ஆய்ந்து, அறிந்து, சுவைத்து, அதன் அருமை பெருமைகளைப் பாராட்டி வருகின்றனர். ஆகவே நான் இங்கு அவர் உரை நல்கியதை உரை

போட முற்பட்டு என் குறையறிவைப்பறை சாற்றிக் கொள்ள விரும்பவில்லை. பிள்ளையவர்கள் உரையாசிரியராவதற்குத் தம்மைப் பண்படுத்திக் கொள்ளும் முயற்சியில் முனைந்திருந்த காலத்தில் மாணவனாக அவரோடு உடனிருக்கும் வாய்ப்புப் பெற்றிருந்ததால், அதற்காக இவர் மேற்கொண்ட உழைப்பையும், உரை கண்ட சிறப்பையும் மட்டும் அறிந்தவாறு அமைவேன்.

உரையாசிரியப் பண்பு பிள்ளையவர்கட்குக் கருவிலே வாய்த்த திரு. அதற்கான இயல்பூக்கம் உரம் பெற வளர்ந்து, அவர் புலவரானதும் திறம்பெறச் செயல்படத் தொடங்கியது. அதன் பயனாக அவர் பழந்தமிழ் இலக்கிய இலக்கண உரைகளிடம் அடங்கா ஆர்வமும், அவற்றை ஆக்கிய ஆசிரியர்களிடம் ஆழ்ந்த பற்றும், அளவற்ற மதிப்பும் உடையவரானார். இலக்கிய நூலாயினும் இலக்கண நூலாயினும் அதன் பண்டை உரைகளை ஆழ்ந்து பயின்று, தோய்ந்து நுகர்ந்து, ஆய்ந்து தெளிந்தார். அவ்வுரையாசிரியர்கள் நூல்களை அணுகும் முறை உரைகாணும் நெறி, உரை வகுக்கும் திறம் ஆகியவற்றை அறிந்தார். பிறர் கருத்தோடோ தம் கருத்தோடோ மாறுபட அமைந்திருக்கும் உரையை உடனே பிழையுரை என்று முடிவு செய்து விடாமல், அவர் அவ்வாறு உரைவகுத்திருப்பதற்குரிய காரணத்தைக் கண்டறிந்தார். அக்காரணம் அவ்வாசிரியர் காலத்திற் மட்டுமன்றிப் பொதுவாக எக்காலத்திற்கும், சிறப்பாக இக்கால வழக்குக்கும் பொருந்தாததாயின் பொருத்தமான புத்துரை காண முயன்றார். முன்னோரின் ஆய்வுரைகளைக் காய்தல், உவத்தலின்றி நடு நின்று நெடிது ஆராய்ந்தார். இலக்கிய இலக்கண உரைகளை அன்றிச் சிவஞானபோதம், மாபாடியம் போன்ற சமயச் சார்பான சரித்திரப்பேருரைகளையும் பலமுறை படித்துத் தெளிவுற விளக்கம் கண்டார். நாலாயிரத் திவ்வியப் பிரபந்த வியாக்கியானங்களை மரபறிந்த வடமொழி வல்லுநரின் துணை கொண்டு விரும்பிப் பயின்றார். அவை பதசாரம் கூறும் முறை அவரை மிகவும் கவர்ந்தது. ஆங்கில மொழியில் உள்ள சட்டங்களையும், அவற்றின் விளக்கங்களையும், அவை பற்றிய அறிஞர்களின் ஆய்வுரைகளையும், நடுவர்களின் முடிவுரை களையும் பெற்றுப் படித்தார்; சட்ட நூற் புலவர்களும், நீதிமன்ற நடுவர்களும் சட்டவிதிகட்கு விளக்கம் காணும் முறையையும் நடுவர்கள் முடிவு கூறும் திறனையும் தெளிவு பெற அறிந்தார். வெவ்வேறு சமயச் செய்திகளை அவ்வச்சமய அறிஞர்களை அடுத்துக்கேட்டு அறிந்து கொண்டார். வரலாற்று ஆசிரியர்கள் ஆராய்ச்சியாளர்களின் நூல்களையும், கல்வெட்டுக்களையும், அவை பற்றிய விளக்க நூல்களையும் பெற்றுப் படித்து ஆராய்ந்து, தமிழ் இலக்கியங்களில் இடம் பெறும், வரலாற்றுச்

செய்திகளை வகைப்படுத்திக் கொண்டார். இவ்வாறு பல்லாண்டுகள் முயன்று பழந்தமிழ் நூல்கட்கு நயம்பட உரைகாணும் பண்பும் பாங்கும் உரமும் திறமும் பெற்றார்.

பிள்ளைவர்கள் முதன் முதலாக உரையெழுதி வெளியிட்டது திருஞானசம்பந்தர் அருளிய திருவோத்தூர் தேவாரத் திருப்பதிகமாகும். அதனோடு ஞானாமிர்தம் என்னும் சமய நூலுக்கும் தெளிவுரை எழுதி வந்தார். பின்னர் எட்டுத் தொகையுள் ஒன்றாகிய 'ஐங்குறுநூறு' என்னும் நூலுக்கு உரையெழுதத் தொடங்கினார். அகப்பொருள் இலக்கண இலக்கிய நூல்கள் பலவற்றையும் ஆய்ந்து அறிந்து கொண்டு அதற்கு விரிவான விளக்கவுரை வரைந்து முடித்து, அதன் முதற்பகுதியை அச்சிடுவித்து வெளியிட்டார். பின்னர் மற்றப் பகுதிகளும் வெளியிடப்பட்டன. சொற்பொருள், சொல்நயம், சொல் பொருள் நயங்கள், இலக்கண விளக்கம், அகப்பொருள் அமைதி என்னும் அடைவு முறையில் அமைந்த அவ்வகவுரை புலவர் பெருமக்களால் புகழ்ந்து பாராட்டப்பட்டது. அதனை, அடுத்துப் பதிற்றுப்பத்து நூலுக்கு உரையெழுத முற்பட்டார். சேரர் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ள இலக்கியப் பகுதிகளையும் தென்னாட்டையும், சிறப்பாகத் தமிழகத்தையும், தமிழரசர்களையும், அவர்களுள் சேர மரபினரையும் பற்றி வரலாற்று ஆசிரியர்களும் ஆராய்ச்சியாளர்களும் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதியுள்ள கட்டுரைகளையும், நூல்களையும், கல்வெட்டுக்களையும் விரிவாக ஆராய்ந்து விளக்கவுரை எழுதி வெளியிட்டார். பதிற்றுப்பத்திற்குப் பின்னர், புறநானூற்றுக்குச் சிறப்புரை வரைவதில் ஈடுபட்டார். பல ஏடுகளைக் கொண்டு ஆய்ந்து குறைப்பாடல்களாக இருந்தவற்றை இயன்ற வரை நிறைவு செய்துகொண்டு முழு நூலுக்கும் விழுமிய விரிவுரை எழுதி முடித்தார். ஒவ்வொரு பாடலுக்கு முன்னும் பாடினோர், பாடப் பட்டோர் வரலாறு பற்றிய அரிய ஆராய்ச்சிக் குறிப்பைச் சேர்த்துப் பதிப்பித்து இரு பகுதிகளாக வெளியிடுவித்தார்.

அதனை அடுத்து வெளியிட்ட உரைநூல் மணிமேகலை. பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் முன்னரே மணிமேகலையின் முற்பகுதிக்கு உரையெழுதி வைத்திருந்தார். அந்நூலின் பிற்பகுதி புத்த சமயத் தத்துவங்களும், வேறு பல சமயங்களில் மாறுபடும், கோட்பாடுகளும், அளவை நூல் நுட்பங்களும் அடங்கியதாக இருத்தலின் அதற்குப் பொருள் கண்டு தெளிவது எத்தகையோர்க்கும் எளிதாக இல்லை. எனவே அதனை முடிக்க யாரும் முன்வரவில்லை. செயற்கரிய செய்யும் சீரியராகிய பிள்ளையவர்கள் அப்பகுதிக்கு உரைகண்டு முடிக்க

உறுதி கொண்டார். புத்த சமய நூல்களையும் பிற சமய நூல்களையும் முயன்று பெற்று முறையாக ஆய்ந்தார். அச்சமயங்கள் பற்றிய வடமொழி நூல்களை அம்மொழி வல்லுநரின் துணை கொண்டு படித்தறிந்தார். அளவை நூற்செய்திகளை ஐயமற ஆய்ந்து தெளிந்தார். பின்னர் அப்பகுதிக்குத் தெளிவான விளக்கவுரை எழுதிமுடித்து அவ்வுரை நூலை வெளியிடச் செய்தார். அவ்வுரையின் உதவியால் இன்று யாவரும் மணிமேகலை நூல் முழுவதையும் படித்துப் பயன் பெறுவது எளிதாகியுள்ளது. மணிமேகலை உரைக்குப் பின்னர் அவர் நாட்டம் நற்றிணையின்பால் சென்றது. பல்லாண்டுகட்கு முன் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் தம் புலமையே துணையாக, அவர் காலத்தில் கிடைத்த அருகிய ஆதாரங்களைக் கொண்டு நற்றிணைக்குச் சிற்றுரையொன்று எழுதி வெளியிட்டிருந்தார். பிள்ளையவர்கள் தம் மாணவர்கட்கு நற்றிணைப் பாடம் நடத்தியபொழுது அவ்வுரையின் குறைபாடு களைக் கண்டு, அந்நூல் முழுவதையும் நன்கு ஆராய்ந்து அரிய குறிப்பு எடுத்திருந்தார். அக்குறிப்பை அடிப்படையாகக் கொண்டு நூல் முழுவதற்கும் விளக்கமான விரிவுரை எழுதி முடித்தார். அண்மையில் அஃது இருபகுதிகளாக வெளியிடப் பட்டது. பிள்ளையவர்களின் முன்னைய நூலுரைகள் அனைத்திலும் இது மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது பிள்ளையவர்கள் மாணவர்கட்குப் பாடம் சொல்லும்பொழுது ஒவ்வொரு நூலுக்கும் விரிவான விளக்கக் குறிப்பு எடுத்து வைத்திருந்தார். பின்னர் அவர் எழுதி வெளியிட்ட உரைகள் யாவும் பெரிதும் அக்குறிப்புக்களின் விரிவே ஆகும். அகநானூறு, குறுந்தொகை, தணிகைப் புராணம், தொல்காப்பியச் சொல்லதிகாரம், பொருளதிகாரம் ஆகியவற்றுக்கும் அவர் அரிய குறிப்புகள் வரைந்து வைத்திருந்தார். அவை இன்னும் உரைவடிவு பெற்றில. அவையும் உரைவடிவில் வெளிவருமாயின் தமிழ் மொழியின் வளம் செழிக்கவும், பிள்ளையவர்களின் புலமை நலத்தை உலகம் அறிந்து உவக்கவும் உதவும் என்பது ஒருதலை. பிள்ளையவர்கள் ஓய்வு பெற்ற பின்னரும் ஓய்ந்திராமல் பொள்ளாச்சி வள்ளலாகிய மகாலிங்கம் அவர்களால் ஊக்குவிக்கப்பட்டு, வள்ளலாரின் திருவருட்பா நூலுக்கு விரிவுரை எழுதினார். தமிழ் அறிஞர்களின் துணையும் தமிழ்ச் செல்வர்களின் ஆதரவும் கிடைக்கப் பெறின் அவர் தமிழ்மொழியின் செழிப்புக்கு இன்னும் பல சிறப்புத் தொண்டுகள் செய்திருக்கக்கூடும். அதற்குரிய ஆர்வமும் ஆற்றலும் அவருக்கு உண்டு.

## பேச்சாளர்

பாடம் சொல்லும் திறமை, எழுத்தாற்றல், பேச்சு வன்மை ஆகிய மூன்றும் ஒருவரிடம் ஒருங்கு அமைவது அரிது. இவற்றுள் ஒன்று இருப்பவரிடம் ஏனை இரண்டும் இருப்பதில்லை. ஆனால் பிள்ளையவர்களிடம் இம் முத்திறனும் ஒருசேர முழுமையாக அமைந்திருந்தன. பேச்சு வன்மை ஒரு கலை; பெறுதற்கரிய கலை. அது பிள்ளையவர்களுக்குப் பிறவிப் பேறாக வாய்ந்தது. இவர் விவேகானந்தரை முன் மாதிரியாகக் கொண்டு தம் பேச்சுத் திறனைப் பேணி வளர்த்துக் கொண்டவர். நேரம் வாய்க்கும் பொழுதெல்லாம் விவேகானந்தரின் ஆங்கிலச் சொற் பொழிவுகளை ஆழ்ந்து படிப்பார். சிறந்த பேச்சாளராக விரும்புவோர் விவேகானந்தரின் உரைகளைப் பலமுறை படிக்க வேண்டும் என்ற அவர் தம்மாணவர்கட்குக் கூறுவதுண்டு. கவர்ச்சியான தோற்றம், அவைக்கு அஞ்சாத துணிவு, எடுப்பான இனிய குரல், சீரிய செந்தமிழ் நடை, திருத்தமான உச்சரிப்பு, சிந்தனைத் தெளிவு, நினைவாற்றல், சொல்லழுத்தம், தட்டுத் தடையின்றித் தொட்டுத் தொடரும் பேச்சோட்டம் ஆகிய பேச்சாளர்க்கு இன்றியமையாத அமைதிகள் அனைத்தும் பிள்ளையவர்களிடம் இயல்பாகவே இனிது அமைந்தன. பேச்சுக்குரிய பொருள் இலக்கியம். இலக்கணம், சமயம் ஆகியவற்றுள் எதுவாயினும் அது பற்றிய செய்திகளையும் கருத்துகளையும் வரையறுத்து, வகைப்படுத்தி, முன்பின் முரணாது-காரண காரியத் தொடர்பமைய நிரல்படத் தொடுத்து, பொருத்தமான மேற்கோள்களோடு வருத்தமின்றி விளக்கி, அவையோர் ‘அருமை’ ‘அருமை’ என்று பெருமை பேசுமாறு உரையாற்றும் திறமை பிள்ளையவர்களின் தனியுரிமையாகும். சமயச் சொற்பொழிவுகளில் அவருடைய சிந்தனைத் தெளிவையும் சாத்திரத் தேர்ச்சியையும் காணலாம். இலக்கணச் சொற்பொழிவுகளில் நுண்மாண் நுழை புலத்தையும் ஆய்வுத்திறனையும் அறியலாம். இலக்கியச் சொற்பொழிவுகளில் ஆழ்ந்தகன்ற நூலறிவையும், நயம் கண்டு சுவைக்கும் பண்பு நலத்தையும் உணர்ந்து .இன்புறலாம். இலக்கியங்களும் சிறப்பாகக் கம்பராமாயணப் பகுதிகள் பற்றிக் கற்றோர் இதயம் களிக்குமாறு உரையாற்றுவதால் பிள்ளையவர்களுக்கு இணை பிள்ளையவர்களே. பேச எடுத்துக்கொண்ட பகுதியை நாடகக் காட்சியாக அமைத்து, அதற்குரிய பாத்திரங்களை அவையோர் மன அரங்கிலே மாறி மாறி வந்து நடிக்கச் செய்து அவர்களை இன்ப வெள்ளத்தில் ஆழ்ந்தும் அற்புத ஆற்றலைப் பிள்ளையவர்கள் பாலன்றிப் பிறரிடம் காண்பதரிது. ‘கால் பணத்திலே கல்யாணம், அதிலே கொஞ்சம் வாணவேடிக்கை’

என்னும் பீடிகையோடு அவர் கம்பனின் சொற் சுருக்கத்தையும் கவிநயத்தையும் எடுத்துக்காட்டி விளக்கி அவையாரைச் சுவைக்கச் செய்வார். அவர் பேசச் செல்வதற்குமுன் பேச்சுக்குரிய பொருள் பற்றிச் சிந்தித்துச் சிறு குறிப்பு ஒன்றை வரைந்து கொள்வது வழக்கம். அக்குறிப்பை உரை நிகழ்த்தும் இடத்திற்கு உடன்கொண்டு செல்லமாட்டார். ஆனால் அங்கு நிகழ்த்தும் உரை முற்றிலும் அக்குறிப்பை ஒட்டியே அமைந்திருக்கும். இது கொண்டு இவருடைய சிந்தனைத் தெளிவையும் நினைவாற்றலையும் தெரிந்து கொள்ளலாம்.

## மாணவர்களிடம் அன்பு

பிள்ளையவர்கள் மாணவர்களிடம் பேரன்பு கொண்டவர். இவர் மாணவர்களை 'ஐயா, ஐயா' என்ற அக மகிழ்ச்சியோடு அன்பொழுக அழைக்கும் இன்ப ஒலி இன்றும் என் செவிகளில் இனிது ஒலித்துக் கொண்டிருக்கிறது. தம்மிடம் பயிலும் மாணவர்கள் சிறப்பாகத் தேறிச் சீராக வாழ வேண்டும் என்பதில் இவர் அளவற்ற ஆர்வம் கொண்ட அருளாளர். அதற்கேற்ப அரிய நூல்களையும் ஐயம் திரிபு அறியாமைக்கு இடமின்றி அருமையாகப் பாடம் சொல்வார். தாம் அரிதில் வருந்திச் சேர்த்த தமிழ் வளத்தைத் தம்மாணவர் வருந்தாமல் எளிதில் பெறுமாறு வாரி வழங்குவார். தாம் முயன்று வரைந்து வைத்துள்ள அரிய நூற்குறிப்புக்களை மாணவர்கட்குக் கொடுத்துப் பயன்பெறச் செய்வார். தாம் பாடம் கேட்ட நூல்களைப் பிறர்க்கு முறையாகப் பாடம் சொல்லவும், கட்டுரை, ஆய்வுரைகள் வரையவும் அறிஞர் அவையில் அஞ்சாமல் அடக்கமாக உரையாற்றவும் மாணவர்கட்குப் பயிற்சியளிப்பார், தம்மைக் கண்டு அளவளாவ வரும் அறிஞர்கள், புலவர்கள், செல்வர்கட்குத் தம் மாணவர்களை அறிமுகப்படுத்தி வைப்பார்.

மாணவர்களின் ஆக்கத்தில் அவர் காட்டிய அக்கறைக்கும் ஆர்வத்திற்கும் எடுத்துக்காட்டாக என்னைப் பற்றிய சில செய்திகளை இங்குத் தந்துரைப்பது தவறாகாது என்று கருதுகின்றேன். நான் பிள்ளையவர்களிடம் மாணவனாக அணுகியபொழுது ம. விஜயராகவன் என்னும் பெயருடையவனா யிருந்தேன். அது என் பெற்றோர் எனக்கு இட்டு அழைத்த பெயர். நான் மாணவனாக அமர்ந்த சில நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் பிள்ளையவர்கள் என்னை நோக்கி, "உங்கள் பெயரில் ஒரு மாற்றம் செய்யலாம் என்று நினைக்கின்றேன். இராகவனுக்கு அடைமொழி எதற்கு? விஜயம் இன்றி இராகவன் இல்லை. ஆகவே உங்கள் பெயரை அடைமொழியின்றி 'இராகவன்' என்று மாற்றிக் கொள்ளுங்கள்; 'இராகவன்' என்னும் பெயர்

எத்துணைச் சுருக்கமாகவும் சிறப்பாகவும் இருக்கிறது பாருங்கள்'' என்றார் நான் ஆசிரியரின் அன்பு ஆசையை அருளாணையாக ஏற்று அவ்வாறே மாற்றிக் கொண்டேன். அன்று முதல் என் பெயரை 'ம. வி. இராகவாசாரியன்' என்று எழுதி வரலானேன். அதனைக்கண்ட பிள்ளைவர்கள் மீண்டும் ஒரு நாள் என்னை அழைத்து, ''உங்கள் பெயரில் இன்னும் ஒரு மாற்றத்திற்கு இடம் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்; 'ஆசாரியன்' என்பதற்குப் பதிலாக 'ஐயங்கார்' என்பதை இணைத்துக் கொள்ளுங்கள். ரா. இராகவையங்கார், மு. இராகவையங்கார்களோடு நீங்கள் ம. வி. இராகவையங்காராக இருங்கள்'' என்றார். அதனைக்கேட்டு நான் உணர்ச்சிப் பெருக்கால் உடல் வேர்த்துப் போனேன். அன்று தொடங்கி என் பெயரை அவர் விரும்பியாறே அமைத்துக் கொண்டேன். அவர் என்னை அழைக்கும் பொழுதெல்லாம் 'ஐயங்கார்' என்றே அழைத்து அதனை ஆட்சி பெறச் செய்தார்.

பின்னர் நான் 1936ஆம் ஆண்டே வித்துவான் இறுதி நிலைத் தேர்வு எழுத விரும்பி, அதனைப் பிள்ளையவர்களிடம் கூறி அனுமதியும் ஆசியும் வேண்டினேன்.அவர், 'ஏன், இன்னும் ஓராண்டு பொறுத்திருக்கலாகாதா? அடுத்த ஆண்டு தேர்வு எழுதுவீரானால் முதல் வகுப்பில் தேறி அதற்குரிய பரிசு பெறும் வாய்ப்பும் கிடைக்கும்' என்றார். அப்பொழுது என் குடும்பநிலை அதற்கு இடந்தருவதாக இல்லாததை எடுத்துக்கூறி, நான் மூன்றாம் வகுப்பில் தேறினால் போதும், அன்பு கூர்ந்து அனுமதி தாருங்கள்' என்று வேண்டிக் கொண்டேன். அவர் என் நிலைக்கு இரங்கி, 'அப்படியானால் சரி. இந்த ஆண்டே எழுதினாலும் முதல் வகுப்பில் தேறும் தகுதி உங்களுக்கு உள்ளது. கட்டணம் செலுத்தி விண்ணப்பம் செய்து கொள்ளுங்கள்' என்று ஆசி கூறி அனுமதியளித்தார். அவ்வாண்டே தேர்வு முடிவும் தினத் தாள்களில் வெளிவந்தது. நான் முதல் இரு வகுப்புக்களில் எதனையும் எதிர்பார்க்கவில்லை. ஆகவே மூன்றாம் வகுப்பில் தேறியவர்கள் வரிசையை மட்டும் பார்த்தேன் அதில் என் பதிவெண் இடம் பெறவில்லை. எனவே தேர்வு பெறவில்லை என்று தீர்மானித்துக் கொண்டேன். அன்று மாலை சிறிது வருத்தத்தோடு பிள்ளையவர்கள் இல்லத்திற்குச் சென்றேன். என்னைக் கண்டதும் அவர் மிக்க மகிழ்ச்சியோடு, வாருங்கள். உங்களைத்தான் எதிர்பார்த்திருக்கிறேன். தங்களுக்கு என் பாராட்டுக்கள். இனிப்பு எங்கே? வெறுங்கையோடு வந்திருக்கிறீர்களே, என்ன?' என்றார். அவர் கூற்று என்னைத் திகைப்புறச் செய்தது. நாணத்தால் நாக்குழற 'நான் தேர்வு பெறவில்லை. உங்கள் சொல்லைக் கேளாததன் விளைவு'

என்றேன். 'தேர்வு பெறவில்லையா? யார் சொன்னார்?' என்று கூறியவாறே உள்ளே சென்று இந்து பத்திரிகையை எடுத்து வந்து முதல் வகுப்பில் தேறினவர்களின் வரிசையில் இரண்டாவதாக இடம் பெற்றிருந்த என் பதிவெண்ணைச் சுட்டிக்காட்டி, 'இது உங்கள் எண்தானே? மறந்து விட்டீர்களா?' என்றார். நான் வியப்பினால் விம்மிதமுற்றேனெனினும், தவற்றுக்கு நாணி னேனாய், 'நான் மூன்றாம் வகுப்பையே எதிர்பார்த்தேன், அதனால் பிற வகுப்புக்களின் தேர்வு வரிசைகளைக் கவனிக்கவில்லை. என்றேன். அவர் 'முதல் வகுப்பில் தேறியிருப்பது மட்டும் அன்று; மாநிலத்தில் இரண்டாவது இடம் பெற்றிருக்கிறீர்கள். இது மிகவும் மகிழ்ச்சிக்குரியது' என்று கூறி, கற்கண்டு வாங்கிவரச் செய்து உடனிருந்த அன்பர்களுக்கு வழங்கினார். பிள்ளையவர்கள் மாணவர்களிடம் கொண்டிருந்த அன்புக்கும், அவர்கள் தேர்ச்சியிலும் உயர்விலும் அவருக்கு இருந்த அக்கறைக்கும் இந்நிகழ்ச்சி ஒன்றே சிறந்த சான்றாகும் அன்றோ?

பிள்ளையவர்களிடம் பாடம் கேட்டு உயர்நிலை எய்தியோர் பலர். அவர்களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர் முன்பு தமிழ்நாடு சட்டமன்றத் தலைவராக இருந்த புலவர் கோவிந்தன் ஆவார். புலவர் கோவிந்தன் உயர்நிலைப் பள்ளியில் பயின்றுவந்த நாளிலிருந்தே பிள்ளையவர்களின் அன்புக்குரிய அருமை மாணவராக அமைந்தார். பிள்ளைவர்களிடம் தனித்தமிழ் பயின்ற மற்ற மாணவர்களும் சிறப்புறத் தேறிப் பட்டம் பெற்று உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மதிப்போடு பணியாற்றி வருகின்றனர். பிள்ளையவர்களின் மாணவர்கள் அனைவரிடத்தும் அவருக்குரிய தனி முத்திரை யைக் காணலாம். அவர்கட்குப் புலவருலகில் மதிப்பு உண்டு.

இவ்வாறு தம் உழைப்பினாலும் தாம் உயர்ந்தோடு தம்மை அடுத்தோர் பலரும் உயர்ந்து உய்ய உதவி வந்த ஒப்புரவாளராகிய பிள்ளையவர்கள் மறைந்தது பெரும் அவலம் தருகிறது. தமக்கென வாழாது தமிழே உயிர்ப்பாக, உணவாக, உரமாகக் கொண்டு தமிழுக்காகவே வாழ்ந்த அவர் திருப்புகழ் வளமை குன்றாத கன்னித் தமிழே போல இன்னும் பல்லாண்டுகள் மன்னுதல் உறுதி.

"கற்றவர்தாம் கண்ணீர்க் கடல்மூழ்கச் சாய்ந்துதமிழ்
உற்றகடல் மூழ்கி ஒளிந்ததே - பெற்ற நிலம்
எங்கும் ஒளிசெய்திரந்ததுரை சாமியெனும்
பொங்கு தமிழ்ச்சுடரிப் போது"

# இணையற்ற உரைவேந்தர்!

- கவியரசியார் திருமதி சௌந்தரா கைலாசம்

அருந்தமிழின் மூத்தமகன் ஔவை தந்த
அமுதமொழிக் கவிதைகளை மாந்த ரெல்லாம்
விருந்தாயும் மருந்தாயும் ஏற்றுக் கொண்டு
மேன்மையினை எய்தினரென் றுரைத்தால் உண்மை!
பெருந்தனமாய் இந்நாளும் அவைவி ளங்கிப்
பேருலகம் சரியான தடத்திற் செல்லச்
சிறந்தவொரு துணையாகத் திகழ்வ தாலே
சீருக்கும் பேருக்கும் குறைவே இல்லை!

அருமையுள தமிழ்ச்சங்க நூல்க ளெல்லாம்
யாவருமே கற்றறிதல் வேண்டும் என்று
கருதியதால் மிகத்தெளிவாய் உரைசெய் திட்டார்!
கவினுடைய காவியங்கள் ஆய்ந்து ரைத்தார்!
பெருமைமிகும் இராமலிங்க வள்ளல் தந்த
பேசரிய திருவருட்பா உரையும் கண்டார்!
விரிவுலகம் முற்றிலுமே வியந்து போற்றும்
வித்தகராம் ஔவைதுரை சாமிப் பிள்ளை!

ஆசிரியப் பணியாலே இளைஞ ரெல்லாம்
அறிவோடும் ஆற்றலொடும் வாழ வைத்தார்!
பேசுகின்ற திறனாலே தமிழர் நெஞ்சில்
பிறங்குமொரு தனியிடத்தில் அமர்ந்து கொண்டார்!
நேசமிகும் உளத்தாலே எந்தப் போதும்
நீலமணி மிழற்றானைத் தொழுதி ருந்தார்!
வாசமுறு நற்றமிழே உயிராய் எண்ணி
மாசறியாப் பொன்னேபோல் வாழ்ந்தி ருந்தார்!

# சங்ககாலத் தமிழ்மகன்

*(உரைவேந்தர் - 50 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதிய கட்டுரை)*

பண்டைநாளில் வாழ்ந்த தமிழ்மகன் என்னாது சங்ககாலத் தமிழ்மகன் என்றே தலைப்பு அமைகிறது. பண்டைக்காலம் என்பது ஒரு காலவெல்லைக்குள் அடங்காது பரந்த பண்பினதாய் இருக்கிறது. சங்ககாலம் என்ற வழி, முற்காலத்தே நம் செந்தமிழ்நாட்டில் சங்கம் இருந்து தமிழ்த் தொண்டாற்றித் தனிப்பெருஞ் சிறப்பெய்தியிருந்த காலம் என்ற உணர்வு நம் உள்ளத்தில் எழக் காண்கின்றோம். ஆயினும் இச் சங்ககாலம், இத்துணை ஆண்டுகட்கு உட்பட்ட காலம், மேற்பட்ட காலம் என எண்ணிட்டுக் காண முடியாத நிலையில் உள்ளது. சங்கத்தின் உண்மையையே ஐயுறுவோரும், ஐயுற்றுச் சங்கமென்பதே இருந்ததில்லையென்போரும், உண்டென்போரும், கிறிஸ்து பிறப்பதற்கு முன்னென்போரும் பின் என்போரும் எனப் பல திறத்தராய் ஆராய்ச்சியாளர் உளர். மற்று, நம் செந்தமிழ் மொழிக்கண் பழைய நூல்கள் பல சங்க இலக்கியங்கள் என்ற பெயரால் வழங்கி வருகின்றன. அவ்விலக்கியங்கள் தோன்றி நிலவிய காலமே சங்க காலமாம் என்ற பொது எல்லையை ஈண்டுக் கால வெல்லையாகக் கொள்கின்றேன். அவ் விலக்கியங்கள் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க் கணக்கு என மூவகையாய் இயலுகின்றன. இவை எழுந்து வளர்ந்த சிறந்த காலம், சங்க காலம் இன்றேல், இவை சங்க இலக்கியம் எனப்படா.

பத்துப்பாட்டு என்பது ஒரு தொகை நூல். இதன்கண் திருமுருகாற்றுப்படை முதலாகக் கூத்தராற்றுப்படை ஈறாகப் பத்துப் பெரும்பாட்டுக்கள் உள்ளன. இவற்றுள் இயற்கையின் இனிய காட்சி இனிது காட்டப்பெறுகிறது. அக்காட்சியைக் காட்டும் கட்டுரைகள் இலக்கணவரம்பு கடவாது, உள்ளம் கொள்ளத்தக்க அளவில் நின்று இன்பம் சுரப்பிக்கும் திறம் எண்ணுந்தோறும் நமக்கு இறும்பூது தருகின்றது. இதனால் கல்வியின் இன்றியமையாமையை வற்புறுத்துகின்றார்கள். தமிழ்மன்னன் ஒருவன் தன் கோல் நிழலில் வாழும் மக்களை நோக்கி,

*"உற்றுழி யுதவியும் உறுபொருள் கொடுத்தும்*
*பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே;*

பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும் மனம்திரியும்;
ஒரு குடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக என்னாதுஅவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்"

என்று வற்புறுத்துகின்றான். ஒரு பெரியவர், வாழ்நாள் மிகுதியாகியவழியும், தமக்கு நரையோ திரையோ உண்டாகாமல் இருந்தார். அது கண்ட அறிஞர் சிலர் அவரை நோக்கி, இதற்குக் காரணம் என்னை என வினவினர். அவர்கட்கு அவர், "என் மனைவி, மக்கள் முதல் அனைவரும் என்கருத்திற்கேற்ப ஒழுகும் இயல்புடையவர். வேந்தனும் அல்லவை செய்வதிலன். சான்றோர் பலர் யான் வாழும் ஊரே" என்றார். எனவே, சான்றோர் இனத்தனாய்., கல்வியறிவு சிறந்து நிற்பது தனக்கு இன்றியமையாதது என்பதைச் சங்ககாலத் தமிழ்மகன் இனிதறிந்து ஒழுகிய திறம் நாம் காண்கின்றோம்.

சங்ககாலத் தமிழ்மகன், தன் வாழ்வில், உடல் வளர்ச்சி கருதா உயிர் வளர்ச்சியொன்றே கருதி, கல்வி பயின்று அறிவுபெறு ஆர்வம் கொண்டான் என்பவர் அவனது இயல்பை அறியாதவராவர். உடல் உரம்பெறுவதற்கேற்ற ஆள்வினைக்கண் அவனது உள்ளம் அழுந்திய பயிற்சி பெற்றிருந்தது. வாளேந்திப் போருடற்றிச் செய்வன செய்தல் தன் கடன் என்பதை அவன், தாயால் இளமையிலேயே வற்புறுத்தப் பெறுகின்றன. நீரில் நீந்துதல், யானை குதிரை முதலிய இவர்ந்து செல்லுதல், வாட்பயிற்சி, விற்பயிற்சி முதலியன பயின்றிருந்தான். இதனை நன்குணர்ந்த கம்பனும், இராமன் வாயில் வைத்து, "மதிதரு தனயரும் வலியர்கொல்" என்று வினவுகின்றான். உடல் வளர்ச்சிக்குப் படைப் பயிற்சியும், அறிவு வளர்ச்சிக்குக் கல்வியும் வேண்டுவனவாம் என்பதைச் சங்ககாலத் தமிழ்மகன் நன்கு அறிந்திருந்தான். உடல் வன்மையால் மனத்திட்பமும் வினைத்திட்பமும் பிறக்கும் என்பது அவனது உள்ளக்கிடை. வீரமகனொருவன், மனக்கினிய மகளொருத்தியை மணம் புணருங் காலத்தே, அரசனது போர்ப்பறை முழங்கக் கேட்டான். ஒருத்தியை மணந்து நுகரும் இன்பத்திலும், தன் நாட்டிற்கு உற்ற இடர் நீக்குதலால் உளதாகும் இன்பம் பெரிதெனக் கருதி மணத்தைத் தள்ளிவைத்துப் போர்க்குச் செல்கின்றான்.

"விளங்கிழைப் பொலிந்த வேளா மெல்லியற்
சுணங்கணி வனமுலை யவளொடு நாளை
மணம்புகு வைகல் ஆகுதல் ஒன்றோ,
ஆரம ருழக்கிய மறங்கிளர் முன்பின்

*நீளிலை யெஃக மறுத்த உடம்பொடு*
*வாரா உலகம் புகுதல் ஒன்றெனப்*
*படைதொட் டனனே குரிசில்"*

*என்று பரணர் கூறுகின்றார்.*

*இவ்வண்ணம் கல்வியறிவும், உடல் வன்மையும் ஒருங்கு பெற்றுத் திகழும் தமிழ் மகனுக்குத் திருமணம் செய்விக்கும் எண்ணம் இந்நாளில், பெற்றோர்க்கு அமைகின்றது. அந்நாளில் அங்ஙனம் இல்லை. தக்கோனாய் மணப்பதம் பெற்ற மகன், தன் மனம் விரும்பும் மாண்புடைய மகள் ஒருத்தியைத் தானே தேர்ந்து காண்கின்றான். அவளது மனவொருமையைப் பல நெறிகளால் ஆராய்கின்றான். கற்பின் திண்மையைக் களவில் ஒழுகிக் காண்கின்றான். பின் தன் களவு நெறி உலகறிய வெளிப்படுத்துகின்றான்.* **"அம்பலும் அலரும் களவு வெளிப்படுத்தலின், அங்கு அதன் முதல்வன் கிழவன் ஆகும்"** என்றே **ஆசிரியர் தொல்காப்பியனார்** *உரைக்கின்றார். பின்னர், பெற்றோர் மணத்திற்கு இயைந்து மணம் புணர்விக்கின்றனர்.*

*மனைவாழ்க்கையின் மாண்பு குறித்து அவன் செய்யும் திறம் மிக்க வியப்புத் தருவதாகும். தான் நடத்தும் வாழ்க்கை தன் நலமே குறித்த வாழ்வாதல் கூடாது. ஈதலும் இசைபட வாழ்தலுமே மனைவாழ்க்கை, தன் வாழ்வு ஏனை எவ்வகை மக்கட்கும் ஏமம் பயக்கும் வாழ்வாதல் வேண்டும். தான் ஈட்டிய பொருளைத் தானே நுகர்தலின்றி, பிறர்க்கும் பயன்பட வாழவேண்டிய தமிழ்மகன் பொருள் ஈட்டல் கருதிக் கலங்கள் ஏறிக் கடல் கடக்கின்றான். நிலவரையிலும் நாடிடையிட்டும் காடிடையிட்டும் செல்கின்றான். செல்பவன் தன் மனைவியின் பிரிவாற்றாமை கண்டு தெருட்டு முகத்தால் வாழ்வின் குறிக்கோளை நன்கு வற்புறுத்துகின்றான். அவன் பிரிந்தவழி, அதனை அவன் மனையுறையும் மகளிர் பேசிக்கொள்வதால் நாம் இனிது அறியலாம்.*

*"அறந்தலைப் பிரியாது ஒழுகலும், சிறந்த*
*கேளிர் கேடுபல வூன்றலும், நாளும்*
*வருந்தா உள்ளமொடு இருந்தோர்க்கு இல்"*

*என்றும்,*

*"அறன்கடைப் படாஅ வாழ்க்கையும், என்றும்*
*பிறன்கடைச் செலாஅ செல்வமும் இரண்டும்*
*பொருளின் ஆகும் புனைஇழை"*

*என்றும் பொருளைக் கருதித் தமிழ்மகன் வாழ்ந்திருக்கின்றான். இவ்வண்ணம் தானும், தன் நாட்டு மக்களும் பொருட்*

குறைபாடின்றி இனிது வாழ்தல் வேண்டும்; நாட்டில் வறுமை தோன்றின், (நாட்டவர் மனத்தே நல்ல எண்ணங்கள் வற்றிவிடும்;) நல்லறிவு மாயும் என்று அஞ்சி, அவன், "**செல்வம் என்பது சேர்ந்தோர் புன்கண் அஞ்சும் மென்கட் செல்வம்**" என்று பிறர்க்கென வாழ்தலைப் பொருளாகப் பேணி வாழ்ந்து வந்தான்.

தான் ஈட்டிய பொருளைத் தானும் ஏனைத் தமிழ்மக்களும் பிறரும் பெற்று இன்பவாழ்வு நடத்தவேண்டும் என விரும்பும் அத் தமிழ்மகனுக்கு வேறொரு கடமையும் உண்டாகின்றது. நாட்டுக்குப் பகைவரால் உண்டாகும் கேடும் அச்சமும், வாழ்க்கையின்பத்தைச் சிதைக்கும் என்ற எண்ணங் கொள்கின்றான். அதனால், தன் நாட்டிற் காவல் குறித்துப் போர் செய்தற்கும், பிற வினை செய்தற்கும் அவன் உள்ளம் கொண்டு, அது குறித்து வினை செய்வதும் கடமை என்பதை உணர்கின்றான். தான் இளமையிற் பெற்ற கல்வி, நாட்டின் நலம் கருதிச் செய்வன செய்தற்குப் போதிய துணை செய்யாமை கண்டவழி, நிரம்பிய கல்வி பெறுவதும் கடன் என்று தெளிகின்றான். ஒரு கால் ஒரு தமிழ்மகன் கல்வி குறித்துப் பிரிந்திருந்தபோது, அவன் பிரிவாற்றாது வருந்திய அவன்றன் மனைமகளிர், வாடைக்காற்றை நோக்கிக் கூறுவாராய், "ஏ, வாடைக்காற்றே,

> தமியோர் மதுகை தூக்காய் தண்ணென,
> முனிய அலைத்தி, முரண்இல் காளை
> கைத்தொழு மரபின் கடவுட் சான்ற
> செய்வினை மருங்கின் சென்றோர் வல்வரின்,

நீ, கரிகாலனோடு வாகையென்னுமிடத்தே ஒன்பது வேந்தர் ஒன்றுகூடி எதிர்த்தபோது, அவனால் அலைப்புண்டு தம் கொற்றக்குடை இழந்த அந்தப்

> 'பீடி மன்னர் போல
> ஓடுவை மன்னால் வாடைநீ எமக்கே'

என்கின்றனர். இங்கே. தமிழ்மகன் மேற்கொண்ட கல்வியை, "கைதொழு மரபின் கடவுட்சான்ற செய்வினை" என்கின்றனர். அரசு முறையாயினும், வாழ்க்கை முறையாயினும் அவ்வதற்கு வேண்டிய கல்வியறிவு இல்வழிச் சிறவாது என்பதற்காகக்,

> "காவற் சாகாடு உகைப்போன் மாணின்,
> ஊறின் றாகி ஆறுஇனிது படுமே;
> உய்த்தல் தேற்றா னாயின்,வைகலும்
> பகைக்கூழ் அள்ளற்பட்டு
> மிகப்பல் தீநோய் தலைத்தலைத் தருமே"

என்று **இளந்திரையன்** கூறுகின்றான்.

நாட்டின் காவல் குறித்துப்போருடற்றி உயிர்கொடுப்பது நல்வினையென்றும், அவ்வாறு உயிர்கொடுத்துப் புகழ் கொள்வோரே சிறந்தோர் என்றும் தமிழ்மகன் கருதியிருந்தான். அக் கருத்தை அவனேயன்றி, அவன் மகளிரும் இனிதறிந்து இருந்தனர். பகைவருடன் போருடற்றச் சென்ற தமிழ்மகன் ஒருவன்றன் மனைமகளிர்,

"நோற்றோர் மன்ற தாமே கூற்றம்
கோளுற விளியார் பிறர்கொள விளிந்தோர் எனத்
தாள்வலம் படுப்பச் சேட்புலம் படர்ந்தோர்"

என்று பேசிக்கொள்கின்றனர். இந்நெறியில் மகளிர் வீரத் தீ எரிய நிற்கும் உள்ளமுடையராதலைச் சங்ககாலத் தமிழ்மகள் இயலறியும் நெறியிற் புலப்படும்.

மனைவாழ்க்கையில் பொருளீட்டல், கல்வியறிவு பெறுதல், வினைசெய்து நாடுகாத்தல் முதலியன செய்தொழுகும் தமிழ் மகன் மகப்பேறு குறித்து மகிழ்கின்றான். மக்களையில்லாத வாழ்க்கையை விரும்புவதிலன். **"மக்களை இல்லோர்க்குப் பயக் குறையில்லை தாம்வாழும் நாளே"** என்று கூறுவன். பெற்ற மக்கள் தம் குடியின் உயர்ச்சிக்கு உழைத்தல் வேண்டுமெனக் கருதுகின்றான். அன்ன மக்களைப் பெற்றோரை வாயார வாழ்த்தி மகிழ்வன்.

"எண்ணியல் முற்றி ஈரறிவு புரிந்து,
சால்பும் செம்மையும் உளப்படப் பிறவும்
காவற் கமைந்த அரசுதுறை போகிய
வீறுசால் புதல்வற் பயந்தனை"

என்று பாராட்டுதலைக் காண்க.

இனி, இவனது உள்ளத்தே கடவுள் உணர்ச்சி வீறுபெற்று நிற்கின்றது. **"பல்லோரும் பரம்பொருள் ஒன்று உண்டு; அதன்பால் பரிவுகொடு பரசி வாழ்தல் எல்லோரும் செய்கடனாம்"** என்று கருதி வாழ்பவன். இவன் ஆண்டவனை வழிபட்டு வேண்டுவன மிக்க வியப்புத் தருவனவாம். சங்க காலத்தே ஏனை நிலத்து மக்கள் வேண்டியன வேறு. பிறர் அழிவதையும், பிறர் ஆக்கம் கெடுவதையும் பொருளாகக் கருதி ஆண்டவனை வேண்டினர் பிறர்; தமிழன்,

"யாம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமு மல்ல,
அருளும் அன்பும்அறனும் மூன்றும்"

என்றும்,

"யாமும் எம் சுற்றமும் பரவுதும்,
ஏம வைகல் பெறுகயாம் எனவே"

என்றும் வேண்டுகின்றான்.

இங்ஙனம், சங்ககாலத் தமிழ்மகன், தன் வாழ்க்கையைத் தனக்கேயன்றிப் பிறர்க்கும் தன் நாட்டின் நலத்துக்கும் எனக் கருதிச் செலுத்தி, ஆண்டவன் வழிபாட்டை மறவாது, மேற்கொண்டு, அவ்வழிபாட்டிலும் தன் வாழ்வின் குறிக்கோள் கை கூடுதற்கு ஆக்கமாகும் அருள், அன்பு, அறம் என்ற மூன்றுமே விரும்பியிருந்த நிலையை, இற்றைநாளில் மக்கள் அறிந்து நலம் பெறுவாராக!

வரலாற்றுச் சிறப்புடைய மாட்சிபெற்றும்,
கடியநடை வாய்ந்து மற்றிங்
கரிதாற்ற மாணவரை அலைக்கழிக்கும்
பதிற்றுப்பத்து அருமை நூலுக்கு
உரையாற்ற வகுத்தளித்தோய்! உயர்புறநா
னூறுமுதல் உறும்நூல் கட்கும்
நிரலாற்றின் விளக்கங்கள் நிகழ்த்திநின்றாய்!
நின்தொண்டு நிகழ்த்தற் காமோ?

ஒருசிலரே அறிஞர்களுள் உயர்ந்தசைவ
சித்தாந்தத் துறுநுட் பங்கள்
அரிசறக்கற் றினிதுணர்ந்த கல்வியாளர்
இஞ்ஞான்று காண நிற்பார்;
மருவிஅவர் குழுவிலொன்றி மாட்சிமிக
வயங்குகின்றாய்! மகிழ்ந்து நின்னைப்
பெரிதுமிகப் பாராட்டிப் பேணிமிகப்
போற்றுகின்றேம்! பிறிதென் சொல்வேம்?

– ந. ரா. முருகவேள்

# சைவ சித்தாந்தம்

(உரைவேந்தர் சொற்பொழிவிலிருந்து 1942)

(சிவவழிபாடு பண்டைநாளில் உலகில் பல இடங்களில் காணப்பட்டதாக ஆராய்ச்சி வல்லார் கூறுகின்றனர். அச்சிவ வழிபாடு இந்நாளில் சுருங்கித் தமிழ்நாட்டெல்லையளவாக நிற்கிறது. அச்சிவத்தொடு தொடர்ப்பட்ட சமய உண்மையே சைவ சித்தாந்தமாகும். இச்சைவ சித்தாந்தத்தை எடுத்துரைக்கும் முதல் நூலாக இப்போதுள்ளது சிவஞானபோதமாகும். அச்சிவஞானபோதப் பெருங்கடலின் நிலை கண்டுணர்ந்து, அதற்குப் பேருரைக் கண்டு, சைவ சித்தாந்தப் பெருந் தலைவராய்த் திகழ்ந்தவர் சிவஞான முனிவர் ஆவர். முப்பொருள் உண்மை கூறும் சைவ சித்தாந்தக் கருத்துள் இறைவன் உயர் இயல்புகளை விளக்கிக் காட்டும் சிவஞான முனிவரின் தெளிவுரைகள் கட்டுரையகத்தே அழகு செய்து நிற்கின்றன.)

சைவ சித்தாந்தம் என்பது சைவருடைய சமய முடிவு என்று பொருள்தரும் சொற்றொடர். சைவர் யார் என்றால், சைவ சமயத்தை மேற்கொண்டொழுகுபவர். சைவக் கொள்கையுடைய அனைவரும் சைவரே யாவர். சைவரென்னும் சொல் சாதி குலம் வேறுபாடின்றி யாவர் யாவர் சைவ சமயக் கொள்கையை மேற்கொண்டு ஒழுகுகின்றார்களோ அவரவர்களுக்கு உரியதாகும். சைவப் பெரியோர்கள் "ஆக்கும் அறிவான் அலது பிறப்பினால் மீக்கொள் உயர்வு இழிவு வேண்டற்க" என்றே வற்புறுத்தியுள்ளார்கள். ஆகவே, சைவருடைய சித்தாந்தம் என்றவுடனே, சைவரென்று கூறிக்கொள்ளும் ஒரு சாதியாருடைய கொள்கையென்று எண்ணுவது குற்றமாகும். இவ்வாறு எண்ணும்படியான நிலைமை யுண்டானதற்குத் தவிர அவ்வாறு கூறிக் கொள்பவர்களையோ மற்றவர்களையோ நோவது தவறாகும், அவர்களுக்கு உண்மையை யுள்ளபடி அறிவிப்பது சைவருடைய கடமை. காலமும் கல்வியறிவில்லா மையும் புகுந்து செய்த அட்டூழியத்தால், சைவரிடையே சாதிச் சைவர்களெனவும் உண்மைச் சைவர்களெனவும் பிரிவு உண்டாயிற்று இப்பிரிவால் உண்டான கேடுகள் பல. சமுதாயத் துறையில் ஒற்றுமைக் குறைவும் அரசியலில் செல்வாக்குக் குறைவும் ஒருபக்கம் தோன்றி வருத்த, பொருளாதாரத் துறையில் ஆண்டுதோறும் சுமார் இரண்டு கோடி ரூபாய் கெடுகிறது. இதனைப் பின்னர் விளக்குவோம்.

சைவ சமயக் கொள்கையை மேற்கொண்டு ஒழுகுபவர் சைவரானால், சைவம் என்பது யாது? "சைவம் சிவத்தோடு சம்பந்தமாவது", என்றார் திருமூலர். சிவம் என்பது எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளுக்குத் தென்னாட்டுத் தமிழர் இட்டு வழங்கிய பெயர். "தென்னா டுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்ற இத்தொடர்கள் மேற்கூறிய பொருளை வற்புறுத்தி நிற்பதைக் காணலாம். இந்தச் சிவத்துக்கும் உயிர்களுக்கும் உள்ள சம்பந்தம் (தொடர்பு) சைவம், சிவத்துக்கும் உலகத்துக்கும் உள்ள தொடர்பு சைவம்; உயிர்களுக்கும் உலகத்துக்கும் உண்டாகும் தொடர்பு சிவத்தால் உண்டாக்கப்படுகிறது; அதனால் அத்தொடர்பும் சைவமே. இம்மூவகைத் தொடர்புகளையும் எடுத்தோதி மக்களை வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வ வாழ்வு பெறுவிப்பது சைவ சித்தாந்தம் என்பது முதலில் நினைவிற் கொள்ளவேண்டிய தொன்று.

சிவமென்னும் செம்பொருள் உருவமுடைய பொருளன்று; அருவமும் அன்று; அருவுருவமும் அன்று. அதற்கென ஒரு பெயரும் இல்லை. குணமும் இல்லை. கட்டுறுவதும் பின்பு கட்டிலிருந்து நீங்குவதாகிய வீடுபேறும் அச் சிவத்துக்கு இல்லை. சிவத்தைவிடப் `பெருமை மிக்க பொருளும், நுண்மையான பொருளும் இல்லை; பெருமைக்கும் நுண்மைக்கும் சிவமே எல்லை. பேரறிவு வடிவே சிவம் என்னலாம். சிவம் இன்பமேயானது. எங்கும் எப்பொருட்கும் சிவமே முதன்மையும் தலைமையும் உடையது. ஒளிமயமான அருளாற்றலை யுடையது இச்சிவ முதற் பொருள். அவ்வாற்றல் அழிவில்லாதது; ஓங்கியுயர்ந்து எங்கும் நிறைந்திருப்பது; சிவமும் அந்த அருளாற்றலோடு நீங்காமல் கூடியிருப்பதாகும். சிவமாகிய முதற்பொருள் மற்ற உயிர்ப்பொருளையும் உலகப் பொருளையும் நோக்க வேறாக இருப்பினும், அவைகளோடு ஒன்றாயும் உடனாயும் விரவி இருப்பது, உயிரும் உலகும் தத்தமக்குரிய தொழிலை ஒழுங்குவழுவாமல் செய்வதற்குச் சிவ முதற்பொருளே காரணமாகும். உயிர்கள் தத்தம் தொழிலாகிய வினைகளைச் செய்து பயன்களை நுகர்ந்துகொண்டே வந்து பக்குவப்படும்போது, சிவமாகிய செம்பொருள் உண்மையறிவு விளங்கச் செய்து வீடு பேற்றினை எய்துவிக்கும். இக்கருத்தையே,

"அருவுருவம் குறிகுணங்கள் முதல்ஈறு
கட்டுவீடு அனைத்தும் இன்றி
பெருமையதாய் நுண்ணியதாய்ப் பேருணர்வாய
ஆனந்தப் பிழம்பாய் எங்கும்

*ஒருமுதலாய அழிவின்றி ஓங்கொளியாய்*
*நிறைந்துளதாய் உயிர்கள்தோறும்*
*விரவிஉடன் தொழிற்படுத்துப் புலம்*
*கொளுத்தி வீடுய்க்கும் பதியாம் எம்மை"*

என்று சிவஞான முனிவர் கூறுகின்றனர்.

இனி, உயிர்கள் எண்ணில்லாதனவாகும். இவற்றை ஒரு மலம் உடையவை, இருமலம் உடையவை. மும்மலம் உடையவையென மூவகையாகக் கூறுபடுத்திச் சித்தாந்த நூல்கள் உரைக்கின்றன. பளிங்குக்கல் எந்தப் பொருளைச் சார்கிறதோ அந்தப் பொருளின் வண்ணத்தை யடைவதைபோல், உயிர்களும் சார்ந்த பொருளின் தன்மையைத் தாமும் பெறும் இயல்புடையவை. உயிர்ப்பொருளுக்கு எக்காலத்தும் அழிவு இல்லை; என்றும் உள்ள பொருளேயாம். சத்து இது அசத்து இது எனப் பகுத்தறிய வல்லது சத்தாகிய உயிர் நம் கண்ணொளி யானது; இருளோடு சேர்ந்தபோது இருளாயும் ஒளியோடு சேர்ந்தபோது ஒளியாயும் நிற்கும். அப்படி நின்றாலும் கண்ணொளி இருளும் ஒளியுமாகாது வேறே. அதுபோல, உயிர்ப்பொருள் சத்தோடுகூடிச் சத்தாகியும், அசத்தோடுகூடி அசத்தாகியும் சதசத்து என வேறாகவே நிற்பது. உயிர் எவ்வெவ் வுடம்பிற் சென்று தங்குகிறதோ அவ்வவ்வுடம்பளவும் நிறைந்து நிற்கும்; சிவ முதற் பொருளின் அருளால் கட்டு நீங்கி வீடு பேறடையும் தன்மையுடையது. உயிர் உணரும் தன்மை யுடையதேயாயினும் தானே எதனையும் உணராது. பிற அறிவுடைப் பொருள் உணர்த்த உணரும் சிறுமையுடையதாகும். உயிரது அறிவு, உணர்த்த உணரும் சிறுமையும், உலகுயிர்களை ஒன்றொன்றாய்ப் பார்த்தறியும் சிறுமையும் உடையது. இதனை,

*"எண்ணிலவாய் வகைமூன்றாய் வெண்சிலைபோல்*
*பற்றியவை தாமாய் என்றும்*
*உண்மையவாய்ச் சத்தசத்தும் பகுத்துணர்*
*சத் தாய்இருளும் ஒளியு மல்லாக்*
*கண்ணியல்பாய் வசிப்பவரு நிறைவாய்*
*எம் மருளால்கட் டறுத்து வீடு*
*நண்ணுபவாய் உணர்த்தஉணர் சிற்றறிவிற்*
*பலவாம்நற் பசுக்கள் தம்மை"*

என்று வரும் செய்யுளில் காணலாம்.

உயிர்களுக்கும், உலகுக்கும் தொடர்புண்டாவதற்குக் காரணமாகிய கட்டு (பாசம்) மூவகைப்படும். அவை, மலம் மாயை, கன்மம் என்பனவாகும். மலம் என்பது ஒன்றாய் அழிவில்லாத அளவிறந்த உயிர்களையும் அனாதியே பற்றி

அவற்றின் அறிவை மறைக்கும் பல்வேறு ஆற்றல்களை யுடையதாய் இருப்பது, மேலும் இம்மலத்துக்கும் உயிர்கட்கு முண்டான தொடர்பு செம்புக்கும் களிம்புக்கும் உள்ள தொடர்புபோல, என்று உயிருண்டு அன்றே மலமும் உடனுண்டு என்னும் பழமைத் தொடர்பாகும். இவ்வாறு தொன்மைத் தொடர்புடையதாயினும் உயிரறிவை மறைத்து இருளாய்த் தோன்றும் இம்மலம் சிவமுதற் பொருளின் அருளொளியால் மறைப்பு நீங்கும் தன்மையுடையது.

இவ்வாறு மலத்தால் தோன்றும் அகவிருளை நீக்குதற்கு முதல்வன் திருவருள் துணையாவதுபோல, அத் திருவரு ளாற்றலால் தோற்றுவிக்கப்படும் உடல், கருவி, உலகு, நுகர்ச்சிகளாகிய மாயையும், துணையாகும். இம்மாயையின் காரியமாகிய உடல் முதலியன மலவிருள்களைச் சிறிது நீக்கி உயிரறிவு தொழிற்படுதற்குரிய விளக்கத்தைத் தருகின்றன. இந்த மாயை சுத்தமாயை அசுத்தமாயை என இருவகைப்படும். இனி, இந்த உயிர்கள் நல்வினை தீவினை யென்ற இரண்டினையும் செய்தற்கு ஏதுவாக இருப்பது கன்மம். இந்த மலமாயை கன்மங்களோடு கூடி நின்று இவற்றைத் தொழிற்படுத்தி உயிர்கள் கட்டினின்றும் நீங்குதற்கேற்ற செவ்வி பெறுவிக்கும் அருளாற்றும் உண்டு. அது திரோதானம் என்று வழங்கும், திரோதானம் மறைப்பது, மல முதலியவற்றோடு கலந்து நின்று மறைத்தலைச் செய்விப்பதுபற்றி இப்பெயர் உண்டாயிற்று. இவ்வாற்றல் மலம், சுத்தமாயை, அசுத்தமாயை, கன்மம், திரோதம் எனக் கட்டு ஐந்தா தலைக் காணலாம்.

இந்த ஐந்தையும், சிவஞான முனிவர்

"ஒன்றாகி அழிவின்றிப் பலவாற்றலுடைத்தாய்ச்
செம்புறுமா சென்னத்
தொன்றாகி அருள்விளையில் நீங்கும் இருள்
மலத்துடன் அத்தொடக்குநீப்ப
மின்தாவும் உடலாகி நல்கும் இருமாயை
இருவினைகட்கேது
என்றோதுகருமம் இவை நிகழ்த்துதிரோ
தமும் என்னும் ஐவகைப் பாசத்தை

என்று உரைத்தருளுகின்றார்.

இதுகாறும் கூறிய சிவம், உயிர், கட்டு எனப்படும் மூன்றினையும் சிறப்புற அறியும் அறிவு மெய்ஞ்ஞானம் எனப்படும். இம்மூன்றின் இலக்கணத்தையும் பொதுவிலக்கணம் சிறப்பிலக்கணம் என இரண்டாகக் கூறுவர். சிவமுதற் பொருளில் பொது விலக்கணம சிறப்பிலக்கணம் என்றும் இலக்கணம்

காணப்படும். இவற்றுட் பொது விலக்கணத்தால் அறிவதை விடுத்துச் சிறப்பிலக்கணத்தால் அறிவதைத்தான் மெய்ஞ்ஞானம், உண்மைஞானம், என்று கூறுவர். இந்த ஞானம் பெறற்கரிய பெருஞானமாகும். இந்த ஞானம் வாய்க்கப் பெற்றவர்கள் மலக்கட்டினின்றும் நீங்கிச் சிவானந்தப் பேரின்பத்தை நுகர்வார்கள். அவர்களை இந்நிலையில் விட்டு நீங்கும் மலத்தின் ஆற்றல் அழிவது கிடையாது; இறைவன் அருளாற்றில் அழுந்திவிடுமாதலால் மீளவும் வந்து உயிர்களைப் பற்றுவதும் கிடையாது.

இதுவே,

"திரிபுணர்வுபொதுமாற்றிச் சிறப்பியல்பால்
உணர்ந்தெண்ணித்தெளிந்துதேறும்
அரியபெறல் சன்மார்க்கஞானநிலை
இதுகிடைத்த அறிவால் மிக்கோர்

பெரியமலப்பிணியவீழ்த்துச் சிவானந்தப்
பெரும்பேறுமருவிப்பாசம்
இரிவதூஉம் புகுவதூஉம் இன்றியொரு
நிலையாம் அவ்வியல்புதன்னில்"

என வருகிறது

இவ்வாறு உண்மைஞான வொழுக்கத்தால் கட்டற்ற உயிர் அறிவு வடிவாய்ச் சிவமுதற் பொருளைச் சேர்ந்து நிற்குங்கால், அறிவானும் அறியப்படு பொருளும், அறியும் அறிவுமாகிய மூன்றாகப் பகுத்தறியவாராமல், அறியப்படும் பொருளேயாய் அதனுள் அழுந்திநிற்கும் நிற்குங்கால் அதன் நிலை கண்ணொளியும் ஞாயிற்றொளியும் போலவும், நீரும் அதன் நிழலும் போலவும் நெருப்பும் அதனோடு கலந்து வெந்து சிவந்து நிற்கும் இரும்பும் போலவும், நீரும் உப்பும்போலவும், ஞாயிற்றொளியும் விண்மீனொளியும் போலவும் ஒன்றாதலும் வேறுதலும் இன்றி ஒன்றி உடனாய் நிற்கும் நிலையாகும். இதனையே அத்துவித நிலையென்று நம் சைவ சித்தாந்தம் கூறுகிறது. இந்த நிலையினைப் பெற முயலும் அன்பர்கள் உள்ளத்தில் இறைவன் திருக்கோயில் கொள்வான்.

இதனைக் குறிக்க வந்த சிவஞான முனிவர்

"உணர்பொருளும் உணர்வானும் உணர்வும் எனும்
பகுப்பொழியா தொழிந்துபானும்
புணர்விழியும் நீர்நிழலும் தீயிரும்பும்
புன்லுவரும் பரிதிமீனும்

துணையவிரண்டறு கலப்பின் எம்முடனாய்ப்
பேரின்பந்துய்த்து வாழ்வார்
இணர்விரைத்த மலர்க்கோதாய் அவர்வடிவே
எமக்கினிய கோயிலாமால்''

என்று இயம்புகின்றார்.

சங்கநூற் பெரும்புலவ! சைவநூற்
கலைச்செல்வ! தமிழர் போற்றும்
துங்கமிகு காப்பியங்கள் மூன்றனுக்கும்
ஆய்வுநூல், சுருக்க நூல்கள்,
நன்குமிகத் தொகுத்தளித்து நலஞ்செய்த
பேராசான்! நனிசி றக்க
ஐங்குறுநூற் றெழில்மிகுத்த அரும்பொருள்கள்
விரித்துரைத்தோய்! ஐய! வாழி!

'கேட்டாரைப் பிணிப்பதுடன் கேளார்க்கும்
வேட்கை'மிகக் கிளர்ச்சி ஊக்கம்
ஊட்டாநின் றறிவுவிருந் துதவுமுயர்
பேச்சாள! உரன்சி றந்தோய்!
நாட்டார்ஐ யாஅவர்கள் நல்லுரையின்
குறைநிரப்பும் நலம்செ றிந்த
ஆட்டான்நீர் ஒருவரெனின், அரியநின்
புகழ்நலன்யாம் அளப்ப தெங்ஙன்?

எழுத்தினொடு பேச்சாலும் இனியதமிழ்,
சிவநெறியென் றிரண்டும் எங்கும்
முழக்கிவரும் நாவலனே! முடுக்குமிகு
தமிழ்வீறு முதிர்ந்த வீர!
ஒழுக்கநெறி இழுக்காதோய்! உரைப்புமிகு
கொள்கையினாய்! உவந்தே யாங்கள்
அழைக்கமகிழ்ந் திவண்போந்த அதற்குநினக்கு
எம்நன்றி அளவொன் றின்றால்!

– ந. ரா. முருகவேள்.

# உரைவேந்தர் உரைத்திறம்

- தமிழாகரர் ந.ரா. முருகவேள்

"மொழிக்கு மொழி தித்திப்பாக" இந்நூற்குப் புத்துரை வரைந்துள்ள பேராசிரியர். திரு. ஒளவை. துரைசாமிபிள்ளை அவர்கள், "உழுத சால்வழியே உழுவான் பொருட்டு, இழுதை நெஞ்சம் இதென் படுகின்றதே" எனத் திருநாவுக்கரசர் வருந்திக் கூறியவாறு, உழுதசால் வழியே உழுது செல்லாமல், இப்பத்தாம் பாடற்குச் செவ்விய இனிய பழுதற்ற முறையிற் பொன்னினும் மணியினும் போற்ற வேண்டுவதாய் எழுதியுள்ள உரைவிளக்கம் சாலவும் பாராட்டற்பாலதாகும்.

'வேள்வியிற் கடவுள் அருத்தினை' என்பதற்கு யாகங்களைச் செய்து தேவர்களை உண்பித்தாய் என்றும், 'உயர்நிலை உலகத்து ஐயர் இன்புறுத்தினை' என்பதற்கு வேதங்களை ஓதினமையால் தேவருலகிலுள்ள முனிவர்களை இன்புறச்செய்தாய் என்றும், 'இளந்துணைப் புதல்வரின் முதியர்ப் பேணித் தொல்கடன் இறுத்த' என்பதற்குப் புதல்வர்களைப் பெற்றமையால் நின்குலத்து முன்னோர்களான பிதிர்க்களைக் காப்பாற்றித் தொல்கடன் இறுத்தாய் என்றும் பொருள் கொள்வர் சிலர். அங்ஙனம் தாம் கொள்ளும் பொருளுக்கு மேற்கோளாகப் பரிமேலழகர் தமது திருக்குறள் உரைக்கண், 'மக்கட்பேறு' என்னும் அதிகாரத்தின் தொடக்கத்தில், "இரு பிறப்பாளர் மூவரானும் இயல்பாக இறுக்கப்படுஉம் கடன்கள் மூன்றனுள், தேவர் கடன் வேள்வியானும், முனிவர் கடன் கேள்வியானும், பிதிரர்கடன் புதல்வரைப் பெறுதலானும் அல்லது இறுக்கப்படுவதில்லை" என வரைந்திருப்பதனைக் காட்டுவர். பரிமேலழகர் வடமொழி நூல்கள் வயப்பட்டு உரைத்தமை பொருத்தமாகாது என மறுப்போர்க்கு, அற்றன்று பரிமேலழகர் வடமொழி நூல்களைத் தழுவிக் கூறினரல்லர்; அவர்தம் கூற்றுக்குப் பதிற்றுப்பத்தின்கண் உள்ள அரிய இப்பாடலே உரிய சான்றாகும் என மொழிவர்.

எனினும், மதிநுட்பம் நூலோடுடைய நம்மருமைப் புதிய உரையாசிரியர் அவர்கள், இக்கருத்துக்களை ஏற்றுக்கொண்டு உடன்பட இசையாமல், "வாழியாதன் எய்துந்தோறும் களவேள்வி நிகழ்த்திக் கடவுளரை மகிழ்விக்கின்றான்; அறப்போர் புரிந்து துறக்கம் புகுந்த வீரர்களாகிய உயர்நிலை

உலகத்து ஐயரை, அவர்தம் ஒழுகலாற்றையும் போர்த்திறனையும் குறித்துப் புலவர்கள் முத்தமிழாலும் போற்றுமாறு செய்து சிறப்பித்தலால் இன்புறுத்துகின்றான்; நாடுகாவலிற் பல்லாற்றானும் உதவியளித்துப் பின்னர் முதுமை எய்திய பெரியவர்களைத் தனது இளந்துணைப் புதல்வர்களைக் கொண்டு தொண்டு செய்வித்துப் பேணி நன்றி பாராட்டுதலால் உவகையுறுவித்துத் தொல்கடன் இறுக்கின்றான்" எனச் செவ்விய விளக்கம் செய்து, தக்க சான்றுகளும் தந்து காட்டியுள்ள அருமைப்பாடு, அவர்தம் நுண்மாண் நுழைபுலமும் பன்மாண் தமிழ் நலமும் அறிவிப்பதாகும்.

*தூயதமிழ்த் தோன்றல்! துரைசாமிச் செம்மல்! நீ*
*ஆய அறுபதாம் ஆண்டுநிறை(வு) - ஏயசெய்தி*
*கேட்டுச் சமாஜம் கிளர்மகிழ்ச்சி எய்தியது!*
*மாட்சியமையின் வாழ்க! மகிழ்ந்து.*

*எழுத்தாலும், பேச்சாலும், இன்னபல்பண் பாலும்*
*வழுத்து தமிழ்த் தொண்டாற்றி மாட்சி-பழுத்துயர்ந்தோய்!*
*சைவசித் தாந்த சமாஜம், நினைப்பெரிதும்*
*மெய்யுவந்து வாழ்த்தும் வியந்து.*

*செந்தமிழின் பேறாம் சிவஞான போதநூல்,*
*முந்துசிவ ஞான முனிவருரை, - எந்த*
*விதத்திற் பதித்தால் விளங்கும்! அது செய்தாய்!*
*துதித்தும்! மதித்தும்! நின் தொண்டு.*

*- ந. ரா. முருகவேள்.*

*வாயில் தமிழ்முழக்கம் வாழ்வில் தமிழியக்கம்*
*பாயில் துயில்போதும் பைந்தமிழே - நோயில்*
*படுப்பினும் பண்டமிழின் பண்பார் பணிசெய்(து)*
*எடுத்ததுரை சாமிபுகழ் ஏற்று!*

*கவிஞர் தி.நா. அறிவொளி*

# நற்றிணை உரைநலம்

திருமதி டாக்டர் இராதா தியாகராசன் அம்மையார்
(முன்னாள் துணைவேந்தர்)

உரைவேந்தர் உரை வரையும் முறை ஒரு தனிச் சிறப்பு வாய்ந்தது. பொருள் கூறும்போது ஆசிரியர் வரலாற்றையும், அவர் பாடுதற்கு அமைந்த சூழ்நிலையையும், அப்பாட்டின் வாயிலாக அவர் உரைக்கக் கருதும் உட்கோளையும் ஒவ்வொரு பாட்டின் உரையிலும் முன்கூட்டி எடுத்துரைக்கின்றார். பாண்டியன் அறிவுடைநம்பியின் பாட்டுக்கு உரை கூறுங்கால், அவன் வரலாற்றையும், அவனது பாட்டின் சூழ்நிலையையும் விரியக் கூறி, முடிவில், "இக்கூற்று அறக்கழிவுடையதாயினும் பொருட்பயன்பட வரும் சிறப்புடைத்தாதலைக் கண்ட பாண்டியன் அறிவுடை நம்பி, தன் இயல்புக்கு ஒத்தியல்வது தேர்ந்து, அதனை இப்பாட்டிடைப் பெய்து கூறுகின்றான் என்று முன்மொழிந்து, பின்பு பாட்டைத் தருகின்றார். பிறிதோரிடத்தே கபிலர் பாட்டுக்குப் பொருளான நிகழ்ச்சியை விளக்கிக் காட்டி, "நெஞ்சுக்குத் தான் அடிமையாகாது தனக்கு அஃது அடிமையாய்த் தன் ஆணைக்கு அடங்கி நடக்குமாறு செய்யும் தலைவனிடத்தே விளங்கும் பெருமையும் உரனும் கண்ட கபிலர் இப்பாட்டின்கண் உள்ளுறுத்துப் பாடுகின்றார்" என்று இயம்புகின்றார். இவ்வாறு பாட்டின் முன்னுரைஅமைவதால், படிப்போர் உள்ளத்தில்அப்பாட்டைப் படித்து மகிழ வேண்டும் என்ற அவா எழுந்து தூண்டுகிறது. பாட்டுக்களம் இனிது படிப்பதற்கேற்ப உரிய இடத்தில் சொற்களைப் பிரித்து அச்சிட்டிருப்பது இக்காலத்துக்கு ஒத்த முறையாகும். அதனால் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்தோன்றிய நற்றிணையின் அருமைப்பாடு ஓரளவு எளிமை எய்துகிறது.

கரும்பைக் கணுக்கணுவாகத் தறித்துச் சுவைகாண்பது போலப் பாட்டைத் தொடர் தொடராகப் பிரித்துப் பொருள் உரைப்பது பழைய உரைகாரர்களான பரிமேலழகர், நச்சினார்க்கினியர் முதலியோர் கைக்கொண்ட முறையாகும். அம்முறையிலேயே இவ்வுரையும் அமைந்திருப்பதால், படிக்கும் போது பல இடங்கள், உரைவேந்தர் உரையோ பரிமேலழகர் முதலியோர் உரையோ எனப் பன்முறையும் நம்மை மருட்டுகின்றது.

உரைக்கு விளக்கம் கூறும் பகுதியில், பாட்டின் சொற்புணர்ப்புக்களில் அமைந்த வினைமுடிபு காட்டிப் பொருளின் திட்பத்தை வரையறுத்து உணர்த்துவதும், அருஞ்சொற்களுக்குப் பொருளும் இலக்கண அமைதியும் கூறுவதும் மிக்க நயம்பொருந்தியுள்ளன. முருக்கமரம் 'வேனிற்காலத்து மலர்வது பற்றி வேனில்முருக்கு எனப்பட்டது'', "வேணா, வேட்கை அவா என்ற இருசொற்புணர்ச்சி'' , "விசும்பு ஆகுபெயராய் முகின்மேல் நின்றது'' என்பன உரைவேந்தரின் உரை விளக்கத்துக்குச் சான்று பகரும். இவ்வாறு விளக்குவது முன்னையோர் முறையே; ஆயினும், பாட்டின் இடையே பயிலும் இயற்கைப் பொருள்களின் இயல்புகளை இக்கால விஞ்ஞானக் கருத்துக் களை மேற்கொண்டு உரைப்பது ஒளவையவர்கள் பால் காணப்படும் புதுநெறியாகும். "அறுகாற்பறவை, தேன்வண்டு; வண்டுக்கும் கால் நான்கேயாயினும், முகத்தில் முந்தி நீண்டிருக்கும் உணரிகள் இரண்டனையும் கூட்டி அறுகால் என்பது பண்டையோர் கொள்கை'' என்பது தெரிகிறது.

இனிப் பாட்டின் பொருள்நலம் கண்டு கூறுமிடத்து நமது உரைவேந்தர் சொற்பொருளில் ஆழ்ந்து சென்று காணும் திறம், மிக்க வியப்பும் இன்பமும் தருகிறது. பொருள் குறித்துத் தன் மனைவியின்றும் பிரிந்து செல்ல வேண்டிய நிலையில் அதனைத் தான் விரும்பாதான் போலப் பேசும் தலைமகன், தான் செல்லவிருக்கும் வழியின் இயல்பைக் கூறலுற்று, "பைங்காய் நன்னிறம் ஒரீஇய செங்காய்க் கருங்கனி ஈந்தின் வெண்புறக் களரி'' என்று உரைக்கின்றான். இதனுட்பொதிந்திருக்கும் கருத்தை, "ஈந்து காயா வழிப் பசுமை நிறமும், காய்த்த வழிச்செந்நிறமும், கனியுமிடத்துக் கருநிறமும் பெறும் என்றது, பிள்ளைமையிற் பசுமையும், இளமையில் எழிலும் செம்மையும், முதுமையில் நரையும் திரையும் எய்திக் கழியும் யாக்கையின் நிலையா இயல்பு கூறியது எனக் கொள்க'' என நமது உரைவேந்தர் எடுத்துக் கூறுவர்.

பிரிந்துறையும் தலைமகன், வேனிற்பருவம் வரக்கண்டு, "நாட்பத வேனில் இணர் துதை மாஅத்த புணர்குயில் விளித்தொறும் நம்வயின் நினையும், நெஞ்சம்'' என்று கூறுகின்றனர். இதனை விளக்கும் நமது உரையாசிரியர், "காவும் சோலையும் கவின்பெறு பொழிலும், புதுத்தளிரும் புதுப்பூவும் தாங்கி, மாவும் புள்ளும் மகிழ்ந்து விளையாட மன்றல் கலந்து தென்றல் உலவும் வேனிற்காலம், காதலிற் பிணிப்புண்ட இளமையுள்ளங்கட்கு இன்பக்காட்சியும் கூட்டமும் வளம்பட நல்கும் மாண்புடைமையால், அக்காலத்து மாங்குயிலின்

தேங்கோள் இன்னிசைக்கண், தலைமகனது கருத்துச் சென்றமையின், 'இணர்துதை மாஅத்த புணர்குயில்' என்றும், குயிலின் இன்னிசை, கேட்போர் உள்ளத்தில் வேட்கையை எழுப்பிக் காதலரை நினைப்பித்தல் இயல்பாதல் பற்றிப் 'புணர்குயில் விளித்தொறும் நம்வயின் நினையும் நெஞ்சமென்றும் கூறினான்' என்பர். இவ்வாறு தொலி நீக்கியபின் பழத்தைச் சுளைசுளையாகப் பிரித்துண்டு மகிழ்வது போலப் பாட்டினுள் ஒவ்வொரு கருத்தாக எடுத்து வரன்முறையில் தெளிவுபடுத்துவதும், அத்தெளிவுரையைத் "தென்னுண்தேனில் தேக்கிய செஞ்சொற்"களில் தொடுத்து உரைப்பதும் உரை நடையின் மாண்பாகும்.

இவ்வுரையின் இடையிடையே சங்ககால மகக்ளிடையே நிலவிய கொள்கைகளையும் வழக்காறுகளையும், கல்வெட்டுக்கள், வரலாறுகள் முதலியற்றிலிருந்து சான்று காட்டி விளக்கம் செய்வது, பெரியதோர் வரலாறு படிப்பது போலும் உணர்வைப் படிப்போர் உள்ளத்தில் தோற்றுவிக்கிறது. மாலையில் மகளிர் மனைகளில் விளக்கேற்றி வழிபடுவது, பிறந்த மகனைத் தந்தை சென்று காண்பது, இளமகளிர் தைந்நீராடுவது முதலிய வழக்காறுகள் உரிய வகையில் விளக்கப்படுகின்றன.

ஔவையவர்கள், சமய நூற் புலமையால் "சித்தாந்த கலாநிதி" என்ற சிறப்புப் பெற்றவராதலால், அவரது சமயவுணர்வை இந்நூலின் காப்புச் செய்யுட்கு வரைந்துள்ள விரிவுரை நன்கு வெளிப்படுத்திவிடுகிறது. "மாநிலம் சேவடியாக" எனத் தொடங்கும் அப்பாட்டை முதலிற் கண்ட பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், வடமொழிச் செய்யுளொன்றின் துணை கொண்டு திருமாலுக்கேற்றி உரை கூறினார். ஏனைத் தொகை நூல்கள் பலவற்றிலும், பாரதம் பாடிய பெருந்தேவனார் செய்து சேர்த்த கடவுள் வாழ்த்துச் செய்யுட்கள் பலவும் சிவநெறிக்கே உரியவாய் இருப்பதால், இது திருமாலுக்கேற்றியிருப்பதை இதுகாறும் அறிஞர் எவரும் ஆராயவில்லை. இதன்கண் "படர்கதிர் மதியமொடு சுடர் கண்ணாக' என்று ஏட்டில் காணப்பட்ட பாடவேறுபாடு, சிவனுக்கேற்றுவதை எடுத்துக் காட்டி, இச்செய்யுளின் கருத்து முற்றும், அப்பெருந்தேவனார் காலத்தவரான சேரமான் பெருமாளுடைய பாட்டு ஒன்றில் அமைந்திருப்பதை ஆதரவாகக் கொண்டு விரித்துரைப்பது, ஈண்டுக்குறிக்கத் தக்கதாகும். மேலும், "தீதற விளங்கிய

திகிரியோன்" என்பதிலுள்ள "தீது" என்றது. "செம்பிற் களிம்பு போல உயிரிற்கிடந்து அதனை அறியாமை இருளில் செறித்திருக்கும் மலம்" என்றும், "திகிரி என்றது திருவருளாகிய ஆணை" யென்றும் ,உரை கூறுவது சைவநூற்கொள்கை. உயிர்கள் மலவிருளின்நீங்கி அறிவொளி பெறுதற்கென்றே இவ்வுலகு இறைவனால் படைக்கப்பட்டது எனப் படைப்பின் நோக்கத்தையும், அந்நோக்கம் நிறைவுறல் வேண்டி, இறைவன் உலகுயிர்களோடு ஒன்றாயும் உடனாயும் இருக்கும் திறத்தையும் உரையிடைப் பெய்து கூறுவது மிக்க இன்பம் தருகிறது. சித்தாந்த நூல்கள் உரைக்கும் தத்துவக் கூறுகளைப் பொறிவட்டம் புந்திவட்டம் உயிர்வட்டம் என்று மூன்றாக வகுத்து விளக்குவதும், "மன நினைவு எண்ணங்களையும், அவற்றுள் நிகழ்ந்தவை நிகர்பவைகளையும் ஆராய்ந்து காணும் உயிர், அறிவு வடிவாய் வீற்றிருக்கும் இடம் உள்ளம்" எனப்படுகிறது என்று தெரிவித்துத் திருவள்ளுவர், திருநாவுக்கரசர் முதலிய சான்றோர் நூல்களிலிருந்து ஆதரவு காட்டுவதும் ஒளவையவர்களின் சமய நூல் தெளிவை இனிது புலப்படுத்துகின்றன.

இங்ஙனம், தெளிந்த சமயவறிவும், பரந்த புலமையும், சொற்பொருளை நுணுகிக் காணும் மதிமையும் ஒருங்கு உடையவராதலால், ஆசிரியர் ஒளவை அவர்கள் அளிக்கும் இவ்வுரைநூல் தமிழ் அறிஞர்க்கு அறிவு விருந்தும், மாணவர்களுக்குப் பெருந்துணையுமாகும் பெருநலம் உடைய தென்றால் அது சிறிதும் மிகையாகாது.

பௌவம்போல் தமிழ்மொழிநூற் பரப்பெல்லாம்
பயின்றளந்து பண்பின் மிக்க
செவ்வியநற் புலமைநலம் சிறந்தோங்கும்
திருவாள! சீர்த்தி சான்றோய்!
ஒளவை. சு. எனத்தமிழர் அகமகிழ்ந்து
பாராட்டும் அறிஞர் ஏறே!
சைவமொடு தமிழ்தழைக்கத் தகவுழைப்போய்!
நின்வரவுஎம் தவப்பே றாகும்!

– ந.ரா. முருகவேள்.

# நற்றிணை உரைவளம்

பேராசிரியர் கண. சிற்சபேசன்

ஔவை துரைசாமிப் பிள்ளையவர்கள் இயல்பிலேயே நகைச்சுவை வல்லவர். அவரது நகைச்சுவை நயந்தோன்றுமாறு நற்றிணையில் ஒரு பாடல் கிடைத்தது. வான் பெயல் ஆனாது பொழிந்தது. தினை காக்கும் கொடிச்சி வெளியே வந்து குளிர்கொள் தட்டையால் கடியவில்லை; இதனைச் சாதகமாக்கிக் கொண்ட கடுவனொன்றும் அதன் மந்தியும் தம் கன்னங்கள் பொம்மென நிறையத் தினையை முக்கி வான் மழையில் நனைந்து தோன்றின. இக்காட்சி நோன்பியர் நீராடி நின்ற தோற்றம் போன்றது. இதனை நகைச்சுவை தோன்ற விளக்கந் தருகின்றார் உரையாசிரியர். மந்தியும் கடுவனும் அங்கை நிறையத் தினையை ஞெமிடிக் கொண்டது கையே கலனாக உண்ணும் நோன்பியரைப் போன்றிருந்தது. கொடுங்கவுள் நிறைய அத்தினையை அடைத்து நின்ற காட்சி, கையிடைக் கொண்ட சோற்றமலையை ஒரே முறையில் அடைத்துக் கவுள் புடைத்து நிற்கும் தவசியர் போல இருந்தது. மெய்ம்மயிர் பனிப்பதவான் பெயலில் ஈரங்கூர நின்றது, முடியுடை முனிவர் நீராடி ஈரம்புலராத தோற்றத்துடன் நின்றது போன்றிருந்தது. இவ்வாறு உவமையையும், பொருளையும் ஒன்றற்கொன்று முரணாகாமல் இரண்டின் ஏற்றமும் குறையாமல் உரை வகுத்த பெருமை பெரிதும் பாராட்டற்பாலது.

இதுபோன்ற உரையெழுதுவார் உரை மட்டும் எழுதியமையால் பிறர் தமிழ் மொழிக்குச் செய்ய வேண்டுவன இவை என உணர்த்தவும் வேண்டும். ஔவை சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் தம் கூர்த்தமதியாலும், தேர்ந்த அனுபவத்தாலும் அறிவுரை பகரும் இடமொன்றுண்டு. "தமிழ் நாட்டின் வரலாற்றினைத் தமிழ் நன்கறிந்த தமிழுள்ளம் படைத்த தமிழ் நன்மக்களே முற்பட்டுத் தமிழிலும் ஆங்கிலத்திலும் விரிய நினைந்து எழுதுங்காலம் உண்டாயின்" நன்று என்று அவரது அருள்நிறை உள்ளம் வேட்கையுறுகின்றது. தமிழ் மாநில அரசு இதனை மேற்கொண்டு செய்யவேண்டுமென்ற தம் ஆர்வத்தினையும் ஆசிரியர் குறிக்கின்றார்.

உரை முழுவதையும் நன்கு கண்ட எனக்கு ஒரே ஒரு குறையுண்டு. உரையைக் காண இரு கண்ணும், கருத ஒரு நெஞ்சமும், அறிய ஆறறிவும்,எழுத ஒரு கையும் ஒரு போதும் போதா.

கற்றார்க்குக் கழிநலம் சேர்க்கும் பாகினும் இனிய இவ்வுரை கருத்துக் கருவூலம், தமிழ் மரபின் புதிய திறவுகோல், உரை நடைச் செறிவின் உயர்ந்த தோற்றம். ஔவை துரைசாமிப் பிள்ளையவர்கள் தமிழ் நெல்லிக்கனியை உண்டவர்.

# வாழ்வியல் நலம்

பிள்ளையவர்கள் சைவ அறிவும், நெறியும் சான்றவர். சைவசித்தாந்தக் கலைக்கடல் என்னும் சிறப்புப் பெயர் பெற்றவர். எனினும் பெரியார்பால் பேரன்பும் பேரீடுபாடும் உடையவராய் விளங்கினார். இன எழுச்சிக்குப் பாடுபட்டுவரும் தமிழின முனிவர் என்று ஓரிடத்தில் பெரியாரைக் குறித்திருக்கிறார். பகுத்தறி வெழுச்சியும், முன்னேற்ற ஆர்வமும் சிறந்து விளங்கிய பிள்ளையவர்கள் போளூரில் பணியாற்றியபோது பெரியாரின் படம் ஒன்றினை வாங்கிக் கண்ணாடிச் சட்டமிட்டுச் சுவரிற் பொருத்தியிருந்தார். அவ்வூரினின்றும் மாறுதல் பெற்றுச் செல்லும்போது, அப்படம் செம்மையாகத் திகழவேண்டும் என்னுங் கருத்தில் போளூரில் சோடாக்கடை வைத்திருந்த மாணிக்கம் என்பவரிடம் ஒப்படைத்துச் சென்றார் உரைவேந்தர்.

பெரியார் இந்தியெதிர்ப்பு மறியல் செய்தகாலை பிள்ளையவர்களும், தமிழ்க்காப்புப் போரணியில் பேரீடு பாடுற்றார். தன் மதிப்பியக்கக் கருத்துகளைப் பரப்புவதிலும், ஏற்பதிலும் தமிழ்ப்புலவருலகில் ஔவை அவர்களே முதல்வராக விளங்கினார்.

தமிழ்ப் பகைவரைத் தம் பகைவராகக் கருதும் பெருமனம் உரைவேந்தரின் உயர் மனத்திற்குரியதாயிருந்தது.

திருவேங்கடவன் கீழ்த்திசைக் கல்லூரியில் பேராசிரிய ராகப் பிள்ளையவர்கள் அமர்ந்து தமிழ்ப்பணியாற்றினார். அப்போது பண்டித நாவலர், திரு. ந.மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள், "மணிமேகலையில் அமைந்துள்ள சமயப் பகுதிகளுக்கும், தருக்கப் பகுதிகளுக்கும் சீரிய கூரிய உரை காண வேண்டும்" என நம் பிள்ளையவர்களுக்குப் பணித்தார்கள். அதனையேற்று திருவேங்கடவன் கீழ்க்கலைக் கல்லூரியில் பணியாற்றிய வடநூற் பேராசிரியர்களாலும், அங்கிருந்த நூல் நிலையத்து நூல்களின் உதவியாலும் அரும் பயன் பெற்றார்.

இதனிடையே யசோதா காவிய ஏடு பிள்ளைக்குக் கிடைத்தது. அதனை நன்கு ஆராய்ந்து அருமையான உரையெழுதி வெளியிட்டார்.

"சுமார் நாற்பது ஆண்டுகட்குமுன் யான் தமிழறிவு ஓரளவு பெற்றுப் பழந்தமிழ் இலக்கியங்களைப் பயின்று இன்புற்றகாலை, சில நூல்கள் குறையுற்றிருந்தமை கண்டு, எங்ஙனமேனும் முயன்று நிறைவு செய்வது தமிழன்னைக்குச் செய்யத்தக்க பணியென்ற கருத்தையுட் கொண்டதோடு அதனையே என் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டேன்" என

நற்றிணை முன்னுரையில் சித்தாந்த கலாநிதியவர்கள் தம் வாழ்க்கையின் குறிக்கோளைத் தெள்ளத் தெளிவாகக் குறித்துள்ளார்கள்.

ஒருகால், கரந்தைக்கவியரசு வேங்கடாசலம் பிள்ளையவர்கள், நம் உரைவேந்தரைச் சிதம்பரத்திலுள்ள மீனாட்சி கல்லூரியில் அப்போது முதல்வராய் விளங்கிய பண்டாரகர் உ.வே. சாமிநாதர்பால் விடுத்துத் தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு உரிய தெய்வச்சிலையார் உரை, ஏட்டுச் சுவடியை வாங்கிவரச் சொன்னார். சாமிநாதர் அவ்வேட்டைப் பிள்ளையவர்கள் பாற்கொடுத்துப் படிக்கச் சொல்லிக் கேட்டு மகிழ்ந்தனர். மேலும், "நீங்களும் ஏட்டில் உள்ள பழைய நூல்களைக் கண்டு ஆராய்ச்சி செய்யலாம்; உங்களிடம் உரிய தகுதியுளது" எனப் பாராட்டினார். அப்பாராட்டு பிள்ளைக்குப் பேரூக்கமூட்டியது. அன்றுதொட்டு உரை எழுதுங்கலையினைச் செம்மையாகச் செய்தனர் உரைவேந்தர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் உரைவேந்தரை ஆய்வுத் துறையில் புலவராக ஏற்றுப் பெருமை பெற்றது. அங்கே, 'சைவ சமய இலக்கிய வரலாறு' எழுதினார். மூவாயிரத்துக்குக் குறையாத பாட வேறுபாடுகளை ஆய்ந்து தக்கதைத் தெளிந்து நற்றிணைக்குப் புத்துரை வரைந்து புத்தமிழ்தாக வெளியிட்டுள்ளார் உரைவேந்தர். சைவசமய இலக்கியத் துறையில் "இரும்புக் கடலை" யெனப்பட்ட, 'ஞானாமிர்தம்' நூலை ஏடுகள் பலவற்றைக் கொண்டு ஆராய்ந்து, பழைய உரைக்கு விளக்கக் குறிப்பெழுதி ஒழுங்கு செய்தனர். அதுவும் அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடாக வந்தது.

தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் கரந்தைத் தமிழ்ச் சங்கமும், தமிழ்க்கல்லூரியும் அமையப் பெரிதும் பாடுபட்டவருள் குறிக்கத்தக்கவராவார். அவரிடத்தில் உரைவேந்தருக்குள்ள காதலினை இனைத்தென்றுரைக்கவொண்ணாது. அவர் நினைவாக 'உமாமகேசுவர விரதம்' இருந்து வந்தார்.

உரைவேந்தர் பள்ளியிறுதி வகுப்பில் எவ்வாறு தெளிவான-அழகிய - சிறிய கையெழுத்தினை எழுதினாரோ, அதே வகையில் வடிவம் மாறாமல் இன்றளவும் எழுதுமியல்பினர். காலப்போக்கிற்கேற்ப பலர் கையெழுத்தும் மாறுவதுண்டு. வாழ்வின் நெறியில்மாறாத உறுதியினை அறிஞர் பெருந்தகை பெற்றிருத்தல் போன்றே எழுதுதலிலும் உருச்சிதைவின்றி எழுதிவருவர்.

பன்னெடுங் காலமாகவே கட்டைப் பேனாவினால் மைதொட்டு எழுதிவரும் பழக்கமுடையவர் பேராசிரியர்.

எந்த வேளையிலும், எந்த நிலையிலும் உரைவேந்தருக்கு எந்த நூலிலிருக்கும் பாட்டும், கருத்தும், சான்றும் மறவாது

நினைவிலிருக்கும். உடனே அதைக் கூறி விளக்குவார். ஆனால் தமது மூக்குக்கண்ணாடியையும், மூக்குத்தூள் சிறுபேழையையும் அடிக்கடி மறந்து யாண்டுந் தேடும் மாண்தக்கோர் அவரே. பேரறிஞர்க்குச் சிறு செய்திகளில் மறப்பு நிகழ்வதியற்கையன்றோ!

விடியற்காலையில் உரைவேந்தர் வெந்நீர் காய்ச்சுவதற்கு விறகினைச் சிறு கூறுகளாக வெட்டித் தருங் கைத்தொழிலை, மிக விருப்பத்துடன் ஆர்வமாகச் செய்வதிவர் பழக்கமாகும். எழுபது வயது மேனியுள் ஏழு வயது குழந்தையுணர்வு தவழ்வது நினைதோறும் வியப்பும், உவப்பும் அளிக்கின்றது.

- புலவர் தி.நா.அறிவொளி

* * * * *

பேராசிரியர் ஔவை துரைசாமியின் தமிழ்ப் பணியைப் பாராட்டி உரைவேந்தர், சித்தாந்த கலாநிதி விருதுகள் வழங்கப்பட்டன. மதுரைப் பல்கலைக் கழகம் 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. இலக்கண நுணுக்கம், சிந்தனை வளம், கல்வெட்டுக்களைக் காட்டித்தெளிய வைப்பது முதலிய நலங்களால் இவர் உரையை உலகம் புகழ்ந்தது. ஔவை மூதாட்டியார் "சங்கத் தமிழ் மூன்றும் தா" எனக் கேட்ட பாடலை நாம் அறிவோம். ஆனால், தமிழுலகம் 'சங்கத் தமிழ் மூன்றும் தா' என்று ஔவை துரைசாமி அவர்களிடமே கேட்டுப் பெற்றது.

தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பில், தமிழ்த் தொண்டு செய்த பெரியார் என்ற வகையில், ஔவை துரைசாமிக்குக் கேடயம் பரிசாக வழங்கியபோது, மேடைக்குத் தளர்ந்த நிலையில் வந்திருந்து, "தமிழ்த் தொண்டாற்றிய எனக்கு, நீங்கள் வாள் அல்லவா தந்திருக்க வேண்டும். எவரிடமிருந்து என்னைக்காத்துக் கொள்ளக் கேடயம் தந்திருக்கிறீர்கள்!" என்று முழங்கினார்.

ஔவை துரைசாமி மதுரை தியாகராசர் கல்லூரியில் இருந்தபோது, அழகப்பர் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்த திருமதி டாக்டர். இராதாதியாகராசன் அம்மையார் இவரிடம் தமிழ்க் கல்வி கற்ற பெருமை வாய்ந்தவர். ஔவை அவர்களின் செந்தமிழ்ச் சாயலும், சங்கத் தமிழ்ச் சால்பும் அம்மையார் உரைகளில் மிளிர்வதைக் காணலாம். ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு மதுரையில் நடந்தபோது நிறைவு நாளன்று, பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் வழியாகப் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.அவர்கள், ஔவை துரைசாமி அவர்களுக்கு ரூ.10,000 பொற்கிழி வழங்கிச் சிறப்பித்தார்.

தமிழ்த் தென்றல் திரு.வி.க.. முதல் நாவலர் பாரதியார், தந்தை பெரியார், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், பேரறிஞர் அண்ணா, ப. ஜீவானந்தம், சிலம்புச் செல்வர் ம.பொ.சி. ஆகியோரைக் கொண்ட சிறப்புப் பேச்சாளர்கள் பதின்மரின் பட்டியலில் செந்தமிழ் நலந் துலங்கப் பேசும் சிறந்த பேச்சாளர்களென்று சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களையும், உரைவேந்தர் ஔவை துரைசாமி அவர்களையும், 'சிறந்த பேச்சாளர்கள்' (1947) என்னும் நூலில் நூலாசிரியர் எழுத்துச் செம்மல் மா.சு. சம்பந்தன் சுட்டிக்காட்டியது குறிப்பிடத் தக்கது.

- இலக்கிய மாமணி பி.வி. கிரி

* * * * *

உரைவேந்தர் ஔவை துரைசாமி அவர்களின் அரும்பெரும் புலமைத்திறத்தை அளவிட்டு உரைக்க முடியாது. அரிய உரை நூல்கள் பலவற்றை எழுதி வெளியிட்ட பெரியவாச்சான் பிள்ளையை வைணவ உலகம் உரைவேந்தர் என்று போற்றியதோடு நான்கு அரியணைகளை அவர்களுக்கு வழங்கியது என்பார்கள். திவ்யப்பிரபந்தத்திற்கு உரை வகுத்த நிலையில் முதல் அரியணை என்றும், இராமாயண மகாபாரத உண்மைகளை விரிவுரை செய்ததற்கு இரண்டாவது அரியணையும் வைணவ மறைக்குப் பொருள் விவரித்து எழுதிய விளக்கங்களுக்கு மூன்றாவது அரியணையும் ஆளவந்தார், எம்பெருமான் போன்ற ஞானசிரியர்களின் நூல்களுக்கு அருளிய பேருரைக்கு நான்காவது அரியணை என்றும் நான்கு அரியணைகளை வழங்கி அவரை அரியணை மேல் ஏற்றி. உரைவேந்தர், வியாக்கியான சக்கரவர்த்தி என்று வைணவ உலகம் பாராட்டியது.

அந்த வகையில் சங்க இலக்கியங்களுக்கு உரை கண்டதற்கு ஓர் அரியணையும். சைவ சித்தாந்த நூல்களுக்கு உரை விளக்கம் வழங்கியதற்கு இரண்டாம் அரியணையும் சமுதாய வரலாற்றுக் கல்வெட்டுப் பொருண்மைகளுக்கு விளக்கம் கூறியதற்கு மூன்றாம் அரியணையும், சன்மார்க்க ஞான வேதமாகிய திருவருட்பாவுக்குப் பேருரை எழுதியதற்கு நான்காவது அரியணையும் என நான்கு அரியணையில் ஏற்றி, உரைவேந்தர். பேருரை விளக்கப் பெரும்புலவர் என்று தமிழ் உலகம் பெரியவாச்சான் பிள்ளையை வைணவ உலகம் போற்றியது போலவே ஔவை அவர்களையும் நாம் போற்றலாம்.

· பொறியாளர் திலகம் கெ. பக்தவத்சலம்
செயலர், ஒய்.எம்.சி.ஏ. பட்டிமன்றம்

# பேருரை கண்ட பெருஞ்செல்வர்

மூதறிஞர் டாக்டர் வ.சுப. மாணிக்கம்

(முன்னாள் துணைவேந்தர்)

பல்வேறு காலத் தமிழிலக்கியங்கள், உரைகள், வரலாறு, கல்வெட்டு, சமயங்கள் என்றின்ன துறைபலவற்றில் நிறைபுலமை பெற்றவர் ஒளவை துரைசாமி அவர்கள். தூயசங்கத் தமிழ் நடையை எழுத்து வன்மையிலும் சொல்வன்மையிலும் ஒருங்கு பேணிய தனித் தமிழ்ப் பண்பு இவர்பால் காணலாகும். எட்டுத் தொகையுள் ஐங்குறு நூறு, நற்றிணை, புறநானூறு, பதிற்றுப்பத்து என்ற நான்கு தொகை நூல்கட்கும் உரைவிளக்கம் செய்தவர். இவ்வுரை விளக்கங்களில் வரலாற்றுக் குறிப்பும் கல்வெட்டுக் குறிப்பும் மண்டிக் கிடக்கின்றன. ஐங்குறு நூற்றுச் செய்யுட்களை இந்நூற்றாண்டின் மரவியல் விலங்கியல் அறிவு தழுவி நுட்பமாக விளக்கிய உரைத்திறனைக் காண்கின்றோம். உரை எழுதுவதற்கு முன், ஏடுகள்தேடி மூலபாடம் தேர்ந்து தெளிந்து வரம்பு செய்துகோடல் இவர்தம் உரையொழுங்காகும். தமிழ் இலக்கிய வரலாற்றில் நான்கு சங்கத் தொகை நூல்கட்கு உரை கண்டவர் என்ற தனிப்பெருமையர் மூதறிஞர் ஒளவை துரைசாமி ஆவார். இதனால் உரைவேந்தர் என்னும் சிறப்புப் பெயரை மதுரை திருவள்ளுவர் கழகம் வழங்கிற்று.

பரந்த சமயவறிவும் நுண்ணிய சைவ சித்தாந்த தெளிவும் உடையவராதலின் சிவஞான போதத்துக்கும் ஞானாமிர் தத்துக்கும் மணிமேகலையின் சமய காதைகட்கும் அரிய உரைப்பணி செய்தார். சித்தாந்த சைவத்தை உரையாலும் கட்டுரையாலும் கட்டமைந்த பொழிவுகளாலும் பரப்பிய அருமை நோக்கி 'சித்தாந்த கலாநிதி' என்ற சமயப்பட்டத்தை அறிஞர் வழங்கினர்.

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, சூளாமணி, யசோதர காவியம் என்னும் ஐந்து காப்பியங்களின் இலக்கிய முத்துக்களை ஒளிவீசச்செய்தவர். மதுரைக் குமரனார், சேரமன்னர் வரலாறு, வரலாற்றுக் காட்சிகள், நந்தாவிளக்கு, ஒளவைத் தமிழ் என்றின்ன உரைநடை நூல்களும் தொகுத்தற்குரிய தனிக் கட்டுரைகளும் இவர்தம் பல்புலமையைப் பறைசாற்றுவன.

கடவுட் பற்றும், சைவத்தெளிவும், பொதுநோக்கும் பொலிந்த நம் உரைவேந்தர் முதுமை மறப்பிக்கும் இளையவீறு பெற்று இராமலிங்க வள்ளலாரின் திருவருட்பா முழுமைக்கும் பேருரைகண்ட பெருஞ்செல்வம் தமிழ்ப் பேழைக்குத் தாங்கொணாச் செல்வமாகும். நூலுரை, திறனுரை, பொழிவுரை என்ற முவ்வரம்பாலும் தமிழ்க் கரையைத் திண்ணிதாக்கிய உரைவேந்தர் ஒளவை துரைசாமி நெடும் புகழ் என்றும் நிலவுவதாக!

# கலையின் நிதியாம் உரைவேந்தர்

புலவர் உலகம் மகிழவரும்
புகழ்சேர் ஔவை எனும் பெயர்தான்
குலவும் உரிமைதனக் காக்கிக்
கூறும்அந்தத் திருப்பெயர்தான்
நிலவும் புலமை மரபுக்கும்
நிகழும் வண்ணம் பெயர் பொறித்த
கலையின்நிதியாய் உரைவேந்தர்
கல்வித்திறத்தைப் போற்றுதுமே.

மொழியின் புலமை அது ஒன்றோ
முறைமை தெரியும் வரலாற்று
வழியும் தேர்ந்த பெருந்தகையார்
வளமார்சைவ சித்தாந்தம்
மொழியும் திறத்தில் தனிச் சிறப்பும்
முனைப்பாய் எழுதும்திறத்துளே
விழிபோல் இரண்டு பேராற்றல்
விளங்கும் புலமைத் திருவுடையார்.

உரைகள் வரையும் திறத்தினிலே
ஓங்கும் புகழ்சால் வேந்தரென
உரைநூல் யாவும் தமிழுக்கு
உற்றதுணையாய்ச் செய்தளித்தார்
உரையும் பாட்டும் உடையவராய்
உள்ளந்தன்னில் ஆட்சிசெயும்
உரையின் வேந்தர் புகழ்பாடி
உள்ளத்து உவகை கொள்வோமே!

– மகாவித்துவான் ம. அமிர்தலிங்கம்

# உரைவேந்தர் ஔவை துரைசாமி

## நூற்பட்டியல்

1. திருமாற்பேற்றுத் திருப்பதிகவுரை
2. திருவோத்தூர் தேவாரத் திருப்பதிகவுரை
3. ஐங்குறுநூறு உரை
4. புறநானூறு உரை
5. பதிற்றுப்பத்து உரை
6. நற்றிணை உரை
7. ஞானாமிர்தம் உரையும் விளக்கமும்
8. சிவஞானபோத மூலமும் சிற்றுரையும் பதிப்பும்
9. சிலப்பதிகாரச் சுருக்கம்
10. மணிமேகலை சுருக்கம்
11. சீவகசிந்தாமணிச் சுருக்கம்
12. சூளாமணி
13. சிலப்பதிகார ஆராய்ச்சி
14. மணிமேகலை ஆராய்ச்சி
15. சீவகசிந்தாமணி ஆராய்ச்சி
16. யசோதர காவியம் மூலமும் உரையும்
17. தமிழ் நாவலர் சரிதை - மூலமும் உரையும்
18. சைவ இலக்கிய வரலாறு
19. நந்தா விளக்கு
20. ஔவைத் தமிழ்
21. தமிழ்த்தாமரை
22. பெருந்தகைப் பெண்டிர்
23. மதுரைக்குமரனார்.
24. வரலாற்றுக் கட்டுரைகள்
25. சேர மன்னர் வரலாறு
26. சிவஞானபோதச் செம்பொருள்
27. திருவருட்பாப் பேருரை
28. ஞானவுரை
29. பரணர் - (கரந்தை)

30. தெய்வப்புலவர் திருவள்ளுவர்
31. புது நெறித் தமிழ் இலக்கணம் (இரு பகுதிகள்)
32. Introuction to the study of Thiruvalluvar
33. மருள் நீககியார் நாடகம்
34. மத்தவிலாசம் (மொழியாக்கம்)

சங்கநூற் கடலில் தோய்ந்தெழு கொண்டல்;
சைவசித் தாந்தத்தின் திலகம்;
மங்கலத் தமிழ்த்தாய் இதயத்தை மலர்த்தும்
வான்சுடர்; வள்ளலார் நூலின்
இங்கிதம் தேரும் அஞ்சிறைத் தும்பி;
இமயத்தைப் புலமையால் தாழ்த்தும்
துங்கமார் ஔவை நம் துரைசாமித்
தோன்றலுக் குரியதிந் நூலே


- டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்

# அதியன் இன்றில்லை!

## கவிஞர் மீ. இராசேந்திரன் (மீரா)

பயனுள்ள வரலாற்றைத்தந்த தாலே
பரணர்தான்; பரணர்தான் தாங்கள்! வாக்கு
நயங்காட்டிச் செவிக்குத்தேன் தந்த தாலே
நக்கீரர்தான்தாங்கள் இந்த நாளில்
கயன்மன்னர் தொழுதமொழி காத்ததனால் - தொல்
காப்பியர்தான்! காப்பியர்தான் தாங்கள்! எங்கும்
தயங்காமல் சென்றுதமிழ் வளர்த்த தாலே
தாங்கள்அவ்-ஔவைதான்! ஔவை யேதான்!

அதியன்தான் இன்றில்லை இருந்தி ருந்தால்
அடடாவோ ஈதென்ன விந்தை! இங்கே
புதியதொரு ஆண்ஔவை எனவி யப்பான்
பூரிப்பான்; மகிழ்ச்சியிலே மிதப்பான்; மற்றோர்
அதிமதுரக் கருநெல்லிக்கனிகொ ணர்ந்தே
அளித்துங்கள்மேனியினைக்காத லிக்கும்
முதுமைக்குத் தடைவிதிப்பான்; நமது கன்னி
மொழிவளர்க்கப் பல்லாண்டு காத்தி ருப்பான்!



**1981 – ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில்**

**பிரதமர் இந்திராகாந்தி ஔவைக்கு விருது வழங்குதல்**